# இளைஞர் தமிழிலக்கணமும்

## கட்டுரைப் பயிற்சியும்

இரண்டாம் புத்தகம்

( இரண்டாம் பாரத்துக்கு )

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது

எஸ். வாஸன் கம்பெனி,

மயிலாப்பூர் -: :- மதராஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1955 [விலை அணு 10.

T17552
R005K03

# முன்னுரை

ஒருமொழியில் நல்ல புலமை அடைதற்கு அம்மொழியின் இலக்கணத்தை அறிவது அவசியமாகும். இலக்கணவறிவு பெற்றவர் எழுதுபவை அழகும் அமைதியும் உள்ளனவாய் இருக்கும். அவற்றையே அறிஞர்கள் மேற்கொள்வர்.

இப் புத்தகம் சென்னைக் கல்வியதிகாரிகள் 1949-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள பாடப்பட்டியை ஒட்டி எழுதப்பட்டுளது. இதில், இரண்டாம் பாரத்துக்கு உரிய இலக்கணமும் கட்டுரைப் பயிற்சியும் தனித்தனியே பிரித்தெழுதப்பட்டுள்ளன. இலக்கணப்பாடம் போதிய உதாரணங்களின்மூலம் (Inductive method) தெரிவிக்கப்பட்டுளது. மொழிப்பயிற்சி, கட்டுரைப்பயிற்சி இவற்றில் உதாரணங்களும் பயிற்சிகளும் அதிகமாகவே கொடுக்கப்பட்டுள்ளன. அவை மாணாக்கர்களுக்கு நன்மை பயக்கும். அவர்கள் இப் புத்தகத்தில் உள்ள பயிற்சிகளைச் செய்வதனோடு அவைபோன்றவற்றையும் செய்து பழகுதல் நன்று.

முதல்மூன்று பாரங்கட்கும் உரிய இலக்கணம் முதலியவற்றை ஒரேபுஸ்தகமாக வெளியிட்டிருந்தேன். நண்பர் சிலர் ஒவ்வொரு பாரத்துக்கும் தனித்தனியே புஸ்தகம் வெளியிடுவது நன்று என்று தெரிவித்ததனால் அவ்வாறு இப்பொழுது வெளியிட்டிருக்கின்றேன்.

இப்புத்தகத்தில் மொழிப்பயிற்சி, கட்டுரைப் பயிற்சி இவற்றில் வேண்டுமளவு பயிற்சிகளைச் சேர்த்து எழுதியுதவிய ஸ்ரீமத், R. சார்ங்கபாணி ஐயங்கார் **M.A.**, அவர்கட்கு என்றும் கடப்பாடு உடையேன்.

என் புஸ்தகங்களை ஆதரித்து எனக்கு ஊக்கம் அளித்துவரும் ஆசிரியர்முதலியோர் அனைவருக்கும் நன்றியறித லுடையேன்.

**வே. வேங்கடராஜுலு**

# உள்ளுறை

## இலக்கணம் (Grammar)


பக்கம்

**I. எழுத்து :**

1. சுட்டு—அகச்சுட்டும் புறச்சுட்டும் ... 3, 4
2. வினா—அகவினாவும் புறவினாவும் ... 4, 5
3. குற்றியலுகரம்—வகை ... 5
4. முற்றியலுகரம் ... 7
5. குற்றியலிகரம் ... 8
6. மாத்திரை ... 8

**II. சொல் : பெயர்ச்சொல்**

(a)
1. இடுகுறிப் பெயர் ... 10
2. காரணப் பெயர் ... 10
3. சுட்டுப் பெயர், வினாப்பெயர் ... 11
4. ஒருமை, பன்மை, பொதுப்பெயர் ... 11
5. ஆகுபெயர் ... 12
6. வினையாலணையும் பெயர் ... 12
7. திணைப்பொதுப்பெயர் ... 13
8. பால்—ஆண்பாற்பெயர், பெண்பாற் பெயர்கள்—மாறும் வகைகள்—உயர்வுப் பன்மை ... 14
9. இடம்—தன்மை முன்னிலை கலந்து வருதல் .... 18
10. வேற்றுமை—உருபும் பொருள் சிறி- தளவு ... 19


Sarasvati Mahal Library, Thanjavur
T017552

(b) வினைச்சொல் :

(i) முற்று :

1. உடன்பாடும் எதிர்மறையும் ... 26
2. செய்வினையும் செயப்பாட்டுவினையும் ... 29
3. தன்வினையும் பிறவினையும் ... 30

(ii) எச்சம் :

1. உடன்பாட்டு வினையெச்சமும் எதிர்-மறை வினையெச்சமும் ... 31
2. உடன்பாட்டுப் பெயரெச்சமும் எதிர்-மறைப் பெயரெச்சமும் ... 32

III. வாக்கியம் :

1. செய்யுளிலும் உரைநடையிலும் எழு-வாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டுபிடித்தல் ... 33
2. சொல்லிலக்கணம் ... 35

IV. புணர்ச்சி : ... 37

மிகுதல்

(a) 1. உயிரீற்றுச் சொற்களுக்குமுன் வல்-லெழுத்து மிகுதல் ... 37
2. வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு முன் வல்லெழுத்து மிகுதல் ... 37
3. அகர உகரவீற்று வினையெச்சங்களின் முன்னும் இகர யகரவீற்று வினை-யெச்சத்திற்கு முன்னும் மிகுதல் ... 37

(b) 1. முற்றியலுகரப் புணர்ச்சி

இயல்பு
உடம்படுமெய்

திரிதல்
ண், ள், ல், ன்—இவற்றிற்கு முன் தகாரம் திரிதல்

V. அணி :

உவமை, உருவகம் 40, 41


## மொழிப்பயிற்சி (Language Exercise)


1. வாக்கிய வகை (Kinds of sentence)—

   1. செய்தி வாக்கியம் (Assertive)— உடன்பாடும் எதிர்மறையும் ... 42
   2. கட்டளை வாக்கியம் (Imperative)— உடன்பாடும் எதிர்மறையும் ... 43
   3. வினவாக்கியம் (Interrogative)— உடன்பாடும் எதிர்மறையும்
   4. உணர்ச்சி வாக்கியம் (Exclamatory)— உடன்பாடும் எதிர்மறையும்

2. வாக்கியமாற்றம் (Transformation of sentences)

   1. செய்திவாக்கியத்தை வினவாக்கியமாக மாற்றலும், வினவாக்கியத்தைச் செய்திவாக்கியமாக மாற்றலும் ... 43
   2. உடன்பாட்டை எதிர்மறையாக்கலும் எதிர்மறையை உடன்பாடாக்கலும். 48

3. தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாகவும் தொடர்வாக்கியத்தைத் தனிவாக்கியங்களாகவும் மாற்றல் ... 51
4. நீண்டவாக்கியங்களைச் சிறுவாக்கியமாக்குதல் ... 52

3. வழூஉச்சொற்களும் திருத்தமும் ... 53
(Erroneous words and their correct forms)

4. சொற்பொருத்தம் (Appropriate words) ... 55

5. வாக்கியப்பிழைகளும் திருத்தமும் ... 57
(Common errors in sentences and their correction)

6. நிறுத்துக்குறிகள் (Punctuation marks) ... 58
1. முற்றுப்புள்ளி
2. காற்புள்ளி
3. அரைப்புள்ளி
4. முக்காற்புள்ளி
5. உணர்ச்சிக்குறி
6. மேற்கோட்குறி—ஒற்றை, இரட்டை மேற்கோட்குறிகள்

7. வல்லெழுத்து மிகும் இடமும் மிகாத இடமும்

## VII. கட்டுரைப்பயிற்சி (Composition)

I. கட்டுரை வரைதல்

A. கதை எழுதுதல் ... 67
மாதிரி ... 68
பயிற்சி ... 70
படம் பார்த்துக் கதையெழுதுதல் ... 70
பயிற்சி

B. வரலாற்றுக் கட்டுரையும் வர்ணனைக் கட்டுரையும். 72
பயிற்சி
படம் பார்த்துத் தொழில்முறையை எழுது-
தல் ... 74

C. விளக்கக் கட்டுரை ... 78
மாதிரி
பயிற்சி ... 79

II. கடிதம் எழுதுதல் ... 80
மாதிரி ... 84
பயிற்சி ... 86

III. உரையாட்ல் ... 87
மாதிரி ... 87
பயிற்சி ... 90

IV. நாட்குறிப்பு ... 92

# இளைஞர் தமிழிலக்கணமும் கட்டுரைப் பயிற்சியும்

## இரண்டாம் புத்தகம்

### நூன் முகம்

மாந்தர் தமது உள்ளத்தில் தோன்றுங் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ளும் அறிவு வாய்ந்தவர். அவர் பற்பல சொற்றொடர்களால் தங் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அவ்வாறு தெரிவித்துக்கொள்ளும் வழக்கிற்கு 'மொழி' (பாஷை) என்று பெயர்.

சீனர், ஜப்பானியர் முதலியோர் பேசும் மொழிகள் நமக்கு விளங்குகின்றனவா ? இல்லை. ஏன் ? அவர்கள் வழங்கும் மொழிகள் நாம் வழங்கும் மொழிக்கு முற்றும் வேறானவை. அவ்வாறே இவ்வுலகில் பல்வேறு மொழிகள் வழங்குகின்றன.

சீனர் பேசுவது சீனமொழி ; ஜப்பானியர் பேசுவது ஜப்பான்மொழி ; ஆங்கிலேயர் பேசுவது ஆங்கிலமொழி ; நாம் பேசுவது தமிழ்மொழி.

நாம் நமது கருத்தினைத் தனித்தனிச் சொற்களால்மட்டும் பிறருக்கு அறிவித்தல் இயலாது. வா, போ, இரு என்பவைபோன்ற சில சொற்கள் தனித்தனியே நின்று சந்தர்ப்பத்தினால் பொருள் கொடுக்குமாயினும், அவ்வாறு எல்லாவிடத்தும் சொற்கள் தனித்தனியே நின்று பொருள் கொடுக்கமாட்டா.

இராமன் பாடம் படிக்கிறான்.
சீதை கோலம் போடுகிறாள்.
பசு பால் தரும்.
நாய் வீட்டைக் காக்கும்.

இவ்வாறு பல சொற்கள் தொடராகச்சேர்ந்த சொற்றொடரால் (வாக்கியத்தால்), ஒரு கருத்தினைப் பிறருக்கு அறிவிக்கின்றோம். இவ்வாறன்றி இராமன், பாடம்; சீதை, கோலம்; பசு, பால்; நாய், வீடு என்பவைபோன்ற தனித்தனிச் சொற்களைச் சொன்னால், அவற்றால் நமது கருத்தினைப் பிறர் அறிந்துகொள்ளுதல் முடியாது. இதனால், மொழி (பாஷை) முதன்முதலில் சொற்றொடரால் அமைந்தது என்று அறியலாகும்.

பெரிய வடக்கயிறு ஒன்றனை எடுத்துப் பார்ப்போம்; அது சிறிய கயிறுகள் பலவற்றால் இயன்றிருக்கும். அந்தச் சிறிய கயிறுகளும் பல நார்களால் அமைந்திருக்கும். அதுபோலவே ஒரு வாக்கியத்தை நோக்குவோம்; வாக்கியம் பல சொற்களால் இயன்றிருக்கும். ஒவ்வொரு சொல்லும் பல சிற்றொலிகளால் அமைந்திருக்கும். இதனால் சொற்கு முதற்காரணமாயிருப்பது ஒலியே என்பது நன்கு விளங்கும். ஆயின், தும்முதல் கனைத்தல் முதலிய ஒலிகள் சொற்கு முதற்காரணம் ஆகமாட்டா. ஏன்? சொற்கு உறுப்பாய் நிற்கும் ஒலியே சொற்கு முதற்காரணம் ஆகும். அந்த ஒலிகளைத் தெரிந்துகொள்ளுதற்கு அடையாளமாக எழுதப்பட்டுள்ள வடிவங்களுக்கு எழுத்து என்று பெயர். எழுதப்படுதலின் அவை எழுத்து எனப்பட்டன. இனி, முதற்கண் எழுத்துக்களை நோக்குவோம்.

# I. எழுத்து

பிள்ளைகளே, நீங்கள் தமிழில் உள்ள உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும், உயிரெழுத்தின் வகையாகிய சுட்டு வினுக்களையும், மெய்யெழுத்தின் வகையாகிய வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களையும் கற்றிருக்கிறீர்கள். அவற்றுள் சுட்டு வினுக்களைப்பற்றி இன்னுஞ் சிறிது இங்கு அறிந்துகொள்வோம்.

## 1. சுட்டு

அவன்

அம்மனிதன்

என்னும் இரண்டு சொற்களும் மனிதனெருவனைச் சுட்டுகின்றன. ஆனல், அவன் என்னுஞ் சொல்லில் அ என்பது சுட்டாயிருப்பினும், அது அச் சொல்லைவிட்டுப் பிரிந்திருக்கவில்லை. அதில் அ என்பதை நீக்கிவிட்டால், பிறகு 'அன்' என்பது தனியே வழங்காது. அம்மனிதன் என்பதில் அ என்பதை நீக்கிவிட்டால், மனிதன் என்பது தனியே வழங்கும். ஆதலின், அவன் என்பதிற்போலச் சொல்லின் அகத்தேயிருக்குஞ் சுட்டினை அகச்சுட்டு என்பர்.

அகச்சுட்டு :

| | | | |
|---|---|---|---|
| அவன் | அது | இவன் | இது |
| அவள் | அவை | இவள் | இவை |
| அவர் | | இவர் | |

புறச்சுட்டு :

அம்மனிதன் இம்மனிதன்

இங்கு அகர இகரங்கள் மனிதன் என்னுஞ் சொற்குப் புறத்தே நின்று சுட்டுகின்றன. ஆகலின், அவற்றைப் புறச்சுட்டு என்பர். (புறம்-வெளி).

[அலை, இலை என்பவற்றின் முதலில் அகரம் இகரம் இருப்பினும், அவை சுட்டிக்காட்ட வருதல் இல்லை. அன்றியும், அவன், இவன் என்னுஞ் சொற்களில் அ, இ-க்கள் பிரிந்துநின்றும் பொருள் தருதல் போல, அலை, இலை என்னுஞ் சொற்களில் அ, இ-க்கள் பிரிந்துநின்று பொருள் தரமாட்டா. அதனால், அவற்றில் இருக்கும் அகர இகரங்கள் சுட்டுக்கள் ஆவன அல்ல.]

2. வினா

எவன் ?
எம்மனிதன் ?

என்னும் இரண்டு சொற்களிலும் எ என்பது வினாப் பொருளைத் தரினும், எவன் என்பதில் எகரம் சொல்லின் அகத்தில் நின்று வினாப்பொருளைத் தருகின்றது. ஆதலின், அதில் எ என்பது அகவினா ஆகும்.

அகவினா :

| | | | | |
|---|---|---|---|---|
| எவன் | யாவன் | யாது | எது | ஏது |
| எவள் | யாவள் | யாவை | எவை | |
| எவர் | யாவர் | | | |

என்பவற்றில் எ, யா, ஏ இம்மூன்றும் அகவினா எனப்படும்.

புறவினா :

எம்மனிதன் எப்புத்தகம்

இவற்றில் எ-என்பது மனிதன், புத்தகம் என்னுஞ் சொற்கட்குப் புறத்தே நின்று வினாப்பொருளைத் தருகின்றது. அதனால் இங்கு எ என்பது புறவினா ஆகும்.

3. குற்றியலுகரம்

| | | |
|---|---|---|
| நகு | நாகு | சுளகு |
| முசு | மாசு | பலாசு |
| மடு | ஆடு | அகடு |
| அது | காது | எருது |
| தபு | காபு | மரபு |
| மறு | தாறு | கயிறு |

என்னுஞ் சொற்களில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களின் ஒலி எவ்வாறு கேட்கின்றது?

நகு, முசு, மடு, அது, தபு, மறு என்னுஞ் சொற்களில் கு, சு, டு, து, பு, று இவற்றின் ஒலி நன்கு கேட்கும்.

நாகு, மாசு ; சுளகு, பலாசு முதலிய சொற்களில் கு, சு முதலிய எழுத்துக்களின் ஒலி அவ்வாறு கேட்காது ; குறியதாய்க் கேட்கும். ஏன்?

நகு, முசு, மடு, அது, தபு, மறு என்பவற்றில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள்,

ந, மு, ம, அ, த, ம என்னுந் தனிக்குற்றெழுத்தினை அடுத்து நிற்றலின் குறுகவில்லை.

இதனால் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துக்களும் தனிக்குற்றெழுத்தினை அடுத்துநிற்பின் குறுகமாட்டா

எனவும், மற்ற எழுத்துக்களை அடுத்து நிற்கும் இடங்களி-லெல்லாம் குறுகும் எனவும் அறியலாகும். ஆகலின், தனிக்குற்றெழுத்து அல்லாத மற்றைய எழுத்துக்களை அடுத்து வரும் வல்லுகரம் குற்றியலுகரம் எனப்படும். மற்றைய எழுத்துக்கள் ஆறு. அவை நெட்டெழுத்து முதலி-யன.

1. பாகு —கு, நெட்டெழுத்தினை அடுத்து வந்தது.
2. வரகு —கு, உயிரெழுத்தினை ,,
3. சுக்கு —கு, வல்லெழுத்தினை ,,
4. பங்கு —கு, மெல்லெழுத்தினை ,,
5. தெள்கு—கு, இடையெழுத்தினை ,,
6. எஃகு —கு, ஆய்தவெழுத்தினை ,,

சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களும் இவ்-வாறே ஆறு எழுத்துக்களையும் அடுத்து வரும்.

| | | |
|---|---|---|
| நெட்டெழுத்தினை அடுத்து வரும் உகரம் | | நெடிற்றொடர்க் குற்றியலுகரம் |
| உயிரெழுத்தினை | ,, | உயிர்த்தொடர்க் ,, |
| வல்லெழுத்தினை | ,, | வன்றொடர்க் ,, |
| மெல்லெழுத்தினை | ,, | மென்றொடர்க் ,, |
| இடையெழுத்தினை | ,, | இடைத்தொடர்க் ,, |
| ஆய்தவெழுத்தினை | ,, | ஆய்தத்தொடர்க் ,, |

என்று பெயர் பெறும்.

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
   பாகு, காசு, மாடு, காது, காபு, ஏறு
2. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
   வரகு, பலாசு, சரடு, எருது, மரபு, கயிறு
3. வன்றொடர்க் குற்றியலுகரம்
   சுக்கு, அச்சு, வட்டு, பத்து, தப்பு, புற்று

4. மென்றொடர்க் குற்றியலுகரம்
அங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று

5. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
தெள்கு, வீழ்து, மார்பு

6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
எஃகு, கஃசு, அஃது

குற்றியலுகரம் அரைமாத்திரையளவு ஒலிக்கும்.

குறிப்பு :—வரகு என்பதில் 'ர' உயிர்மெய்யெழுத்தாயினும் அதனைப் பிரித்தால் ர்+அ என்று ஆகுமாகலின், கு அகரவுயிரை அடுத்து வந்தது என்று கொள்க. இவ்வாறே பலாசு என்பதில் சு-ஆகாரவுயிரை அடுத்து வந்தது என்று கொள்க.

4. முற்றியலுகரம்

வல்லுகரம் தனிக்குற்றெழுத்தினை அடுத்து வரும் இடத்தில் குறுகாது. மற்றைய உகரங்கள் எவ்விடத்திலும் குறுகமாட்டா. ஆகலின், அவை முற்றியலுகரம் எனப்படும். உ-ம்.

| | | |
|---|---|---|
| மடு | கணு | உருமு |
| மறு | மரு | உழவு |

பயிற்சி :

கீழ் வருஞ் சொற்களுள், குற்றியலுகரவீற்றுச் சொற்களையும் முற்றியலுகரவீற்றுச் சொற்களையும் எடுத்தெழுதுக. குற்றியலுகரவீற்றுச் சொற்களுக்குத் தொடரும் குறிக்க.

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | மோரு | கதவு | செலவு |
| சுடு | ஆடு | மன்று | யாண்டு |
| மார்பு | பதக்கு | தெரு | மாடு |

**5. குற்றியலிகரம்**

குற்றியலுகரவீற்றுச் சொற்களுக்குமுன் யகர முதன்மொழி வரின், அக் குற்றியலுகரம் இகரமாகத் திரியும். அந்த இகரம் அரைமாத்திரையளவாகவே ஒலிக்கும். அதனல், அது குற்றியலிகரம் ஆயிற்று.

நாடு + யாது = நாடியாது?
குரங்கு + யாது = குரங்கியாது?

என்று வரும். இவற்றில் நாடு, குரங்கு என்பவற்றின் உகரம் இகரமாகத் திரிந்துளது காண்க.

**6. மாத்திரை**

ஒரு குற்றெழுத்தினை இயல்பாக ஒலித்தற்குச் செல்லுங் காலம் ஒரு மாத்திரை ஆகும். அதற்கு அளவாவது—இயல்பாகக் கண் இமைக்கும் நேரம். கை நொடித்தற்குச் செல்லும் நேரமும் அதற்கு அளவாகும்.

**ஒருமாத்திரையளவில் ஒலிக்கும் எழுத்துக்கள் :**

உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க்குற்றெழுத்தும்.

அ ; க, ங முதலியன

[உயிர்மெய்க்குற்றெழுத்தில் மெய்யெழுத்திற்கு அரைமாத்திரையும் உயிர்க்குறிலுக்கு ஒரு மாத்திரையும் ஆக ஒன்றரை மாத்திரை உளதாதல் வேண்டுமே எனின், ஒருபடி நீரில் அரைப்படி உப்புக் கலந்தால் ஒன்றரைப்படி ஆகாமல் ஒருபடியேயாதல்போல, இதுவும் ஒருமாத்திரையில் அமைந்துள்து என்க. இவ்வாறே உயிர்மெய்நெடிலும்

இரண்டரைமாத்திரையளவினதாகாமல் இரண்டு-மாத்திரை யளவினதாயிற்று என்று கொள்க.]

இரண்டுமாத்திரையளவில் ஒலிக்கும் எழுத்துக்கள் :

உயிர்நெட்டெழுத்தும் உயிர்மெய்நெட்டெழுத்தும்.

ஆ ; கா, ஙா முதலியன.

அரைமாத்திரையில் ஒலிக்கும் எழுத்துக்கள் :

மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து, குற்றியலுகரம், குற்றியலிகரம் இவை.

பண்டம், பஃறி, கொக்கு, குரங்கியாது.

பண்டமாற்று, விளி, புலம்பல், இசை (கீதம்) முதலியவற்றில் எழுத்துக்கள் தமக்கு உரிய அளவு கடந்தும் ஒலிக்கும்.

| | | |
|---|---|---|
| தயிரோஒஒ தயிர் | — | பண்டமாற்று |
| தம்பீஇஇ | — | விளி |
| அண்ணாவோஒ | — | புலம்பல் |

இசையில் நீண்டொலித்தலைப் பாடும்போது கேட்டு அறிந்துகொள்க.

# II. சொல்

## 1. பெயர்ச்சொல்

**பெயர் :**

பொருள்களின் பெயர்களுள் பலவற்றிற்குக் காரணம் தெரியவில்லை; சிலவற்றிற்குக் காரணம் தெரிகின்றது. பொருட்காரணம் தெரியாத பெயர்களுக்கு இடுகுறிப்பெயர் என்றும், காரணம் தெரிகின்ற பெயர்களுக்குக் காரணப்பெயர் என்றும் பெயர்.

**1. இடுகுறிப்பெயர் :**

பனை, செடி என்பவற்றிற்குக் காரணப் பொருள் தெரியாமையின், அவை இடுகுறிப்பெய ராகும். ஆயின், அவற்றுள், பனை என்பது ஒருவகை மரத்துக்கே சிறப்பாக வழங்குகின்றது; செடி என்பது கத்தரி, பருத்தி, ரோஜா முதலிய பலவகைச் செடிகளுக்கும் பொதுவாக வழங்குகின்றது. ஆதலின்,

பனை என்பது — இடுகுறிச் சிறப்புப்பெயர்.
செடி ,, — இடுகுறிப் பொதுப்பெயர்.

**2. காரணப்பெயர் :**

வளை, அணி என்பவற்றிற்குக் காரணப்பொருள் தெரிதலின், அவை காரணப்பெயர்களாகும். ஆயினும், அவற்றுள் வளை என்பது வளையல் என்னும் ஒருவகை ஆபரணத்திற்கே சிறப்பாக வழங்குகின்றது. அணி என்பது வளை, சிலம்பு முதலிய பலவகை ஆபரணங்களுக்கும் பொதுவாக வழங்குகின்றது. ஆதலின்,

வளை என்பது — காரணச் சிறப்புப்பெயர்.
அணி ,, — காரணப் பொதுப்பெயர்.

3. சுட்டுப்பெயர் : சுட்டின் அடியில் பிறக்கும் பெயர்

| | | | |
|---|---|---|---|
| அவன் | இவன் | அது | இது |
| அவள் | இவள் | அவை | இவை |
| அவர் | இவர் | | |

4. வினுப்பெயர் : வினுவின் அடியில் பிறக்கும் பெயர்

| | | | |
|---|---|---|---|
| எவன் | யாவன் | எது | எவை |
| எவள் | யாவள் | யாது | யாவை |
| எவர் | யாவர் | | யா |

இவை பொருட்பெயர் முதலியவற்றுள் அடங்கும்.

**ஒருமைப்பெயர்**

அஃறிணைப் பெயர்களுள், து—விகுதி உள்ள பெயர் ஒருமைப்பெய ராகும்.

| | |
|---|---|
| அது | நல்லது |
| இது | பெரியது |

**பன்மைப்பெயர்**

அஃறிணைப் பெயர்களுள் அ, வை, கள் இவ்-விகுதியை உடைய பெயர்கள் பன்மைப்பெய ராகும்.

| | |
|---|---|
| நல்லன | குதிரைகள் |
| நல்லவை | மரங்கள் |
| அவை | |

**பொதுப்பெயர்**

மேற்கூறிய து ; அ, வை, கள் இவ் விகுதி இல்லாத பெயர்களை ஒருமைக்கும் பன்மைக்கும் வழங்கலாம். ஆகலின், அவை பால்பொதுப்பெயர் எனப்படும்.

மரம் வளர்கின்றது—ஒருமை

மரம் வளர்கின்றன—பன்மை

5. ஆகுபெயர் :

'வீட்டுக்கு வெள்ளை யடித்தான்' என்பதில், வெள்ளை என்பது சுண்ணும்பினைக் குறிக்கின்றதன்றோ? வெள்ளை என்பது ஒரு நிறத்தின் பெயர். அது இங்கு வெள்ளை நிறமுள்ள சுண்ணும்பிற்குப் பெயராகி வந்திருக்கின்றது. இவ்வாறே ஒன்றன் பெயர் அதன் சம்பந்தம் உள்ள வேருெரு பொருளுக்குப் பெயராகி வருதல் உண்டு. அப்படிப்பட்ட பெயர்களை ஆகுபெயர் என்று வழங்குவர்.

தலைக்கு ஒரு மாம்பழம் கொடு.

உண்பது நாழி.

6. வினையாலணையும் பெயர் :

பலர் இருக்குமிடத்தில் ஒருவன் பேசினுல், 'அங்கே பேசினவன் யார்?' என்று கேட்கிறோம். அவ்வாறே சிரித்தவன் யார்? வந்தவன் யார்? என்றும் கேட்கிறோம். பேசினவன் (பேசின + அவன்) என்பது, பேசுதல் ஆகிய தொழிலைச் செய்த அவன் என்று பொருள் படும். ஆகலின், 'பேசினவன் இராமன்' என்றால், பேசுதல் என்னுந் தொழிலைச் செய்தவன் இராமன் என்றாகும். இவ்வாறே சிரித்தவன் (சிரித்த + அவன்) என்பது சிரித்தலைச் செய்தவன் என்றும், வந்தவன் (வந்த + அவன்) என்பது வருதலைச் செய்தவன் என்றும் பொருள் படும். இப்படி ஒரு தொழிலினுல் ஒரு பொருளுக்கு வரும் பெயருக்கு வினையாலணையும் பெயர் என்பது பெயர். பேசினவன் யார் என்பதைப் பேசினுன் யார்? என்றும் சொல்லலாம்.

[தொழிற்பெயர்—தொழிலைக் குறிக்கும். வினையாலணையும்பெயர்—தொழிலைச் செய்யும் பொருளைக் குறிக்கும்.]

7. திணைப்பொதுப்பெயர்:

1. உயர்திணை அஃறிணை இரண்டற்கும் வரும் பொதுப்பெயர்.

(i) இயற்பெயர் —கறுப்பன் இவன்—உயர்திணை
கறுப்பன் இந்நாய்—அஃறிணை
கறுப்பி இவள்—உயர்திணை
கறுப்பி இப்பசு—அஃறிணை

(ii) முறைப்பெயர்-இவன் தாய் இவள்-உயர்திணை
இதன் தாய் இப்பசு-அஃறிணை

(iii) தான், தாம் என்னும் பெயர்கள்

| | | |
|---|---|---|
| தான்— | தான் வந்தான்<br>தான் வந்தாள் | —உயர்திணை |
| | தான் வந்தது | —அஃறிணை |
| தாம்— | தாம் வந்தார் | —உயர்திணை |
| | தாம் வந்தன | —அஃறிணை |

2. மூன்று இடங்களுக்கும் வரும் பொதுப்பெயர்—எல்லாம் என்பது.

எல்லாம்—நாமெல்லாம், நீயிரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம்

என்று வருதல் காண்க.

கடவுள், சூரியன், சந்திரன் முதலிய பொருள்களை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வழங்குதல் உண்டு.

| உயர்திணை | அஃறிணை |
| --- | --- |
| கடவுள் இருக்கின்றார் | — கடவுள் இருக்கின்றது |
| ஞாயிறு மறைந்தான் | — ஞாயிறு மறைந்தது |
| சந்திரன் உதித்தான் | — சந்திரன் உதித்தது |

8. பால்

பால் என்பது பகுப்பு; அஃதாவது பிரிவு. பால் ஐந்து வகைப்படும். அவற்றுள்,

**உயர்திணைப்பால்கள் 3 :**

ஆண்பால்—இராமன், முருகன்.

பெண்பால்—சீதை, வள்ளி.

பலர்பால்—மாந்தர், மக்கள்.

**அஃறிணைப்பால்கள் 2 :**

ஒன்றன்பால்—யானை, குதிரை, மரம்,

பலவின்பால்—யானைகள், குதிரைகள், மரங்கள்.

உயர்திணை ஆண்பாலைக் குறித்தற்கு அன், ஆன், மன், மான் என்னும் விகுதிகள் வரும்.

| | | |
| --- | --- | --- |
| அன் | — பொருளன் | (=பொருள் + அன்) |
| ஆன் | — நாட்டான் | (=நாடு + ஆன்) |
| மன் | — வடமன் | (=வடக்கு + மன்) |
| மான் | — கோமான் | (=கோ + மான்) |

உயர்திணைப் பெண்பாலைக் குறித்தற்கு அள், ஆள், இ என்னும் விகுதிகள் வரும்.

| | | |
|---|---|---|
| அள் | — குழையள் | (=குழை + அள்) |
| ஆள் | — இல்லாள் | (=இல் + ஆள்) |
| இ | — பொன்னி | (=பொன் + இ) |

1. ஆண்பாலில் அன் விகுதி பெறும் பெயர்கள் பெண்பாலில் அள் விகுதி பெறும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அவன் | அவள் |
| இவன் | இவள் |
| எவன் | எவள் |
| நல்லவன் | நல்லவள் |

2. ஆண்பாலில் அன் விகுதி பெறும் பெயர் பெண்பாலில் இ விகுதி பெறுதலும் உண்டு.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அரசன் | அரசி |
| தலைவன் | தலைவி |
| தோழன் | தோழி |
| பாட்டன் | பாட்டி |
| மாமன் | மாமி |
| செவிடன் | செவிடி |
| குருடன் | குருடி |

3. ஆண்பாலில் அன் விகுதி பெறும் ஜாதிப்-பெயர் பெண்பாலில் தி அல்லது சி விகுதி பெறும்.

| ஆண்பால் | பெண்பால் | |
|---|---|---|
| மறவன் | மறத்தி | } தி |
| குயவன் | குயத்தி | |
| குறவன் | குறத்தி | |

| | | |
|---|---|---|
| இடையன் | இடைச்சி | சி |
| கணக்கன் | கணக்கச்சி | |
| வாணியன் | வாணிச்சி | |

4. ஆண்பாலில் ஆன் விகுதி பெறும் ஜாதிப்பெயர் பெண்பாலில் தி விகுதி பெறும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| தட்டான் | தட்டாத்தி |
| கன்னுன் | கன்னுத்தி |
| வண்ணுன் | வண்ணுத்தி |

5. ஆண்பாலில் காரன் என்று முடிந்த பெயர்கள் பெண்பாலில் காரி என்று முடியும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| வேலைக்காரன் | வேலைக்காரி |
| கூலிக்காரன் | கூலிக்காரி |
| கடைக்காரன் | கடைக்காரி |
| வீட்டுக்காரன் | வீட்டுக்காரி |

6. சில பெயர்கள் ஆண்பால் பெண்பால் இரண்டற்கும் ஒன்றுபோலவே வரும்.

| ஆண்பால் | பெண்பால் | |
|---|---|---|
| அவன் நோயாளி | அவள் நோயாளி | தமிழ்ப் பெயர் |
| அவன் குற்றவாளி | அவள் குற்றவாளி | |
| அவன் கடனுளி | அவள் கடனுளி | |
| அவன் சாது | அவள் சாது | வட மொழிப் பெயர் |
| அவன் புத்திசாலி | அவள் புத்திசாலி | |
| அவன் தைரியசாலி | அவள் தைரியசாலி | |
| அவன் குணசாலி | அவள் குணசாலி | |

வடமொழியில் இப் பெண்பாற்பெயர்கள் வேறுவடிவில் இருக்கும்.

7. ஆண்பாலில் வான் என்னும் இறுதியையுடைய வடமொழிப்பெயர் பெண்பாலில் வதி என்று வரும்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| குணவான் | குணவதி |
| பாக்கியவான் | பாக்கியவதி |
| புண்ணியவான் | புண்ணியவதி |

8. சில பெயர்கள் ஆண்பாலில்மட்டுமே வரும்.

குரிசில், தோன்றல், விடலை முதலியன.

[இவற்றிற்கு நேரான பெண்பாற் பெயர்கள் இல்லை.]

9. சிலபெயர்கள் பெண்பாலில்மட்டுமே வரும்.

செவிலி, தையல், மங்கை, மடந்தை முதலியன.

[இவற்றிற்கு நேரான ஆண்பாற்பெயர்கள் இல்லை.]

**உயர்திணைப் பன்மை :**

1. னகார ஈற்று ஒருமைப்பெயரை ரகார ஈறு ஆக்கின் பன்மைப்பெய ராகும்.

| | |
|---|---|
| அரசன் | அரசர் |
| அமைச்சன் | அமைச்சர் |
| தோழன் | தோழர் |

2. உயர்திணை ஒருமைப்பெயரோடு அர் விகுதி சேர்த்தால் பன்மைப்பெயர் ஆகும்.

தந்தை + அர் = தந்தையர்
தாய் + அர் = தாயர்
அரசி + அர் = அரசியர்

3. உயர்திணை ஒருமைப்பெயரோடு ஆர் விகுதி சேர்த்தால் உயர்வுப்பன்மை (மரியாதைப் பன்மை) ஆகும்.

| ஒருமை | | | | உயர்வுப்பன்மை | |
|---|---|---|---|---|---|
| தந்தை | + | ஆர் | = | தந்தையார் | (—தந்தைஒருவர்) |
| தாய் | + | ஆர் | = | தாயார் | (—தாய்ஒருவர்) |
| அரசி | + | ஆர் | = | அரசியார் | (—அரசிஒருவர்) |

குறிப்பு :—தந்தையர் என்பது பலரையும், தந்தையார் என்பது ஒருவரையும் குறித்தல் அறிக.

9. இடம் :

1. தன்மையும் முன்னிலையும் கூடிய பெயர் :

இராமா, நாம் வெளியே போவோம்.

இவ் வாக்கியத்தில், நாம் என்பது முன்னிற்பவனாகிய இராமனைத் தன்மையிடத்தோடு சேர்க்கின்றது. ஆதலின் அது தன்மையும் முன்னிலையும் கூடிய தன்மைப் பன்மைப் பெய ராகும்.

2. தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றும் கூடிய பெயர்.

நாம் என்னுஞ் சொல்லே தன்மையோடு முன்னிலையையும் படர்க்கையையுங் கூட்டிச் சொல்லுதற்கும் வரும்.

இராமா, நாம் போவோம்.

3. தன்மையும் படர்க்கையும் கூடிய பெயர்:

இராமா, நாங்கள் போகின்றேம்.

இவ் வாக்கியத்தில், முன்னிற்பவனுகிய இராமனைத் தன்மையிடத்தோடு சேர்க்காமல் நீக்கியுளது. ஆதலின், நாங்கள் என்பது தன்மையும் படர்க்கையும் கூடிய தன்மைப் பன்மைப் பெய ராகும். இவ்வாறே,

இராமா, யாம் போகின்றேம்.
இராமா, யாங்கள் போகின்றேம்

என்பவற்றில் யாம், யாங்கள் என்பவை தன்மையும் படர்க்கையும் கூடிய பெயர்களே யாதல் அறிக.

10. வேற்றுமை:

முதல்வேற்றுமை:

பெயர்ச்சொல் கருத்தாவின் பொருளை உணர்த்துமிடத்து, முதல்வேற்றுமை யாகும். அதனை எழுவாய்வேற்றுமை என்றும் வழங்கலாம். முதல்வேற்றுமைப்பொருள் கருத்தாப்பொரு ளாகும்.

தச்சன் நாற்காலியைச் செய்தான்.

இதில், தச்சன் என்னுஞ் சொல் தச்சன் நாற்காலியைச் செய்த கருத்தா எனக் குறித்தலின், எழுவாய்ப் பொருள தாயிற்று.

முதல்வேற்றுமையின் பொருள் — வினைச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் வினுச்சொல்லையும் கொள்ளுதல்.

இராமன் படிக்கிருன்—வினைச்சொல்
இராமன் என்தம்பி—பெயர்ச்சொல்
இராமன் யாவன் ?—வினுச்சொல்

இரண்டாம் வேற்றுமை :

இரண்டாம் வேற்றுமையின் பொருள் கருமப்பொருள். அதனைச் செயப்படு பொருள் என்பர். கருமமாவது—கருத்தா செய்த தொழிலின் பயனுக்குச் சார்பாயிருக்கும் பொருள். அப்பொருளை அறிவித்தற்கு ஐ என்னும் உருபு வரும்.

செயப்படுபொருளை — ஆக்குதல், அழித்தல், அடைதல், நீத்தல், விரும்புதல், வெறுத்தல், அறிதல் என்று ஏழு பிரிவாகக் கூறலாம்.

1. ஆக்குதல்—வீட்டைக் கட்டினன்.
2. அழித்தல்—வீட்டை இடித்தான்.
3. அடைதல்—வீட்டை அடைந்தான்.
4. நீத்தல்—வீட்டை விட்டான்.
5. விரும்புதல்—பண்டத்தைத் தின்ருன்.
6. வெறுத்தல்—நஞ்சை உண்டான்.
7. அறிதல்—நூற்பொருளை அறிந்தான்.

மூன்ரும் வேற்றுமை :

கருத்தா தொழிலைச் செய்தற்கு வேண்டிய கருவி மூன்ரும் வேற்றுமைப்பொரு ளாகும். அதனைக் குறித்தற்கு ஆல் என்னும் உருபு வரும்.

தச்சன் நாற்காலியைச் செய்தற்குப் பலகை முதலியன வேண்டும்; உளி முதலியனவும் வேண்டும்.

ஆயின், பலகை முதலியனவே நாற்காலியாகச் சமைகின்றன; உளி முதலியன நாற்காலியாகச் சமைதல் இல்லை. ஆகலின், நாற்காலி செய்தற்கு வேண்டிய கருவிகளை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். அக் கருவிகளுள் பலகை முதலியவற்றை முதற்கருவி என்றும், உளி முதலியவற்றைத் துணைக்கருவி என்றும் வழங்குவர்.

தச்சன் மரத்தால் நாற்காலி செய்தான்—மரம்-முதற்கருவி

தச்சன் உளியால் நாற்காலி செய்தான்—உளி-துணைக்கருவி

மூன்றும் வேற்றுமைக்கு உடன்நிகழ்ச்சிப்பொருளும் உண்டு. அப்பொருளைத் தருவதற்கு ஒடு, ஓடு என்னும் உருபு வரும்.

ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான்—ஒடு
தாயோடு குழந்தை வந்தது—ஓடு

வருதலாகிய தொழில் இருவருக்கும் ஒருங்கே நிகழ்தலின், உடன்நிகழ்ச்சிப்பொருள் ஆயிற்று.

**நான்காம் வேற்றுமை :**

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பது. அதன் பொருள்—கோடற்பொருள் (கொள்ளுதற்கு வரும் பொருள்).

நான்காம் வேற்றுமை—கோடை, பகை, நட்பு, தகுதி, முறை, அச்சம், பண்பு முதலிய பொருளில் வரும்.

ஏழைகளுக்கு அன்னம் இட்டான் —கொடை
பாம்புக்குப் பகை கீரி —பகை
இராமனுக்கு நண்பன் சுக்கிரீவன் —நட்பு
அரசர்க்குத் தக்கது செங்கோல் —தகுதி
இராமனுக்குத் தம்பி இலக்குவன் —முறை
புலிக்கு அஞ்சி ஓடினான் —அச்சம்
இவனுக்கு அவன் நல்லவன் —பண்பு

ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன் என்பது. அதனோடு நின்று என்பது சேர்ந்துவருதலும் உண்டு. ஐந்தாம் வேற்றுமை—நீங்குதல், ஒப்பு, எல்லை, [1]ஏது முதலிய பொருள்களில் வரும்.

குதிரையினின்று இறங்கினான் —நீங்குதல்
அன்னம், பாலின் வெள்ளையானது —ஒப்பு
மயிலையின் வடக்கு திருவல்லிக்கேணி —எல்லை
வியாபாரத்திற் பணஞ் சேர்ந்தது —ஏது
[பாலின்=பால்போல. வியாபாரத்தின்=வியாபாரத்தினால்.]

குறிப்பு :—பணஞ்சேர்ந்ததற்கு வியாபாரம் ஏதுவாகுமேயன்றிக் கருவி ஆகாது. ஆதலின், இதனை மூன்றும் வேற்றுமைப் பொருளாகக் கொள்ளுதல் தகாதாயிற்று.

---

1. ஏது - கருத்தா அடையும் பயனுக்குக் காரணமாயிருப்பது.

ஆரும் வேற்றுமை:

இராமனது புத்தகம்

என்ருல், இராமனுக்கும் புத்தகத்திற்கும் உரிமை-யுளது எனத் தெரிகின்றதன்ரே? அவ்வுரிமை-யைத் தெரிவிக்க வந்தது அது என்னும் உருபு. இவ்வாறே,

இராமனது கை

என்ருல், இராமனுக்கும் கைக்கும் உரிமை யுளது. ஆயின், 'இராமனது புத்தகம்' என்பதில், புத்தகம் இராமனேடு சேர்ந்திராமல் தனியே இருக்கின்றது; 'இராமனது கை' என்பதில், கை இராமனை விட்டு நீங்காமல் அவனேடு சேர்ந்திருக்கிறது. ஆகலின், அவ் விரண்டு பொருள்களின் உரிமைக்கும் வேறு-பாடு உளதென்பது நன்கு விளங்கும். அது கருதி, கை போல விட்டு நீங்காமலே உரிமையாயிருப்பதைத் தற்கிழமைப்பொருள் என்றும், புத்தகம்போல விட்டு-நீங்கியும் உரிமையுள்ளதைப் பிறிதின்கிழமைப்பொருள் என்றும் வழங்குகின்றனர்.

தற்கிழமைப்பொருள்

| | |
|---|---|
| இராமனது கை<br>மரத்தினது கிளை<br>பூவினது இதழ் | } உறுப்பு |
| இராமனது கருமை<br>பாலினது வெண்மை | } நிறம் |

இராமனது நடை
மரத்தினது அசைவு } தொழில்

குதிரையினது பந்தி
ஆட்டினது மந்தை } ஒன்றன் கூட்டம்

மஞ்சளது பொடி
சிப்பியினது சுண்ணும்பு } திரிபின் ஆக்கம்
தந்தத்தினது சீப்பு

[திரிபின் ஆக்கம் ஆவது—ஒரு பொருள் மற்ருெரு பொருளாக மாறுதல். மஞ்சட்பொடியில், மஞ்சள் தன் உரு மாறி, பொடியா யிருப்பது காண்க.]

பிறிதின்கிழமைப்பொருள்

இராமனது புத்தகம் — பொருள்
இராமனது ஊர் — இடம்
அரசனது (பிறந்த) நாள் — காலம்

ஏழாம் வேற்றுமை :

புத்தகம் பலகைமேல் இருக்கிறது

என்பதில், புத்தகம் இருத்தற்கு இடமாயிருப்பது பலகை யாகலின், மேல் என்னும் உருபு அந்த இடப்பொருளைக் குறிக்க வந்தது. அதனுல், ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள் என்பது விளங்கும். இனி,

இராமன் வீட்டில் இருக்கின்ருன்.
எள்ளில் எண்ணெய் இருக்கின்றது.

என்பவற்றைக் கவனியுங்கள். வீடும் எள்ளும் இடமாயினும், இராமன் வீடுமுழுவதிலும் நிறைந்திருக்கவில்லை; எண்ணெயோ எள்முழுவதிலும் நிறைந்திருக்கின்றது. ஆகலின்,

இராமன் இருக்குமிடம் — (ஓர் இடம்)
எண்ணெய் இருக்குமிடம்— (முழுவதும்)

எனப்படும். இடத்தை இவ்வாறு இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

புத்தகம் பலகைமேல் இருக்கிறது— (ஓர் இடம்)
பூவில் மணம் உளது — (முழுவதும்)

என்பவற்றையும் இவ்வாறே அறிந்துகொள்க.

ஏழாம்வேற்றுமைக்குக் காலப்பொருளும் உண்டு.

இளவேனிலில் மாமரம் காய்க்கும்.
கார்காலத்தில் மயில்கள் ஆடும்

என்பன காண்க.

சில பொருள்களுள் ஒன்றனைப் பிரித்துக் கூறுமிடத்து, ஏழாம்வேற்றுமையின் உருபுகளுள் உள் என்னும் உருபு வரும்.

அவர்களுள் இவன் நல்லவன்.
விலங்குகளுள் பெரிது யானை

என்று வரும். இவ்வாறன்றி,

அவர்களில் இவன் நல்லவன்.
விலங்குகளில் பெரியது யானை

என்று எழுதுவது தவறாகும்.

## 2. வினைச்சொல்

முற்றுவினை, எச்சவினை :

இராமன் உறங்கி எழுந்தான்.

இதில், உறங்கி என்னுஞ் சொல்லைமட்டும் நோக்கின், உறங்குதலாகிய வேலையைச் செய்த கருத்தா உயர்திணைப்பொருளோ, அஃறிணைப்பொருளோ என்பது தெரியாது. எழுந்தான் என்பதை நோக்கினல், கருத்தா—உயர்திணை ஆண்பால் என்பது தெரியும். இவ்வாறே,

எருது வண்டியை இழுத்துச் செல்கின்றது

என்பதில், இழுத்து என்னும் வினையைமட்டும் நோக்கினல் கருத்தா இன்னபொருள் என்பது விளங்காது ; செல்கின்றது என்னும் வினையை நோக்கினல், அஃது அஃறிணை ஒன்றன்பால் என்பது விளங்கும். இவ்வாறு கருத்தாவினைத் தெரிவிக்கக் கூடிய வினைச்சொல் முற்றுவினை என்றும், மற்றையது எச்சவினை என்றும் பெயர் பெறும்.

1. உடன்பாடு எதிர்மறை :

பலவகைப்பட்ட வினைகளையெல்லாம் உடன்பாட்டுவினை, எதிர்மறை வினை என்று இரண்டுவகையாகப் பிரிக்கலாம்.

உடன்பாட்டுவினை—தொழிலின் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

அவன் உண்டான்.
அவன் வருவான்.

எதிர்மறை வினை—தொழில் நிகழாமையையும், தொழிலை மறுத்தலையும் உணர்த்தும்.

*அவன் உண்டிலன் — தொழில் நிகழாமை*
*தீயவரோடு சேராதே — மறுத்தல்*

எதிர்மறை வினைமுற்று :

1. மூன்று காலத்திலும் உடன்பாட்டு வினைமுற்றுக்களோடு, அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல; அல்லேன் ; அல்லேம் ; அல்லை, அல்லீர் என்னுஞ் சொற்களைச் சேர்த்துக் கூறின், எதிர்மறை வினைமுற்று ஆகும்.

| | | |
|---|---|---|
| வந்தானல்லன் | — | *அல்லன்* |
| வந்தாளல்லள் | — | *அல்லள்* |
| வந்தாரல்லர் | — | *அல்லர்* |
| வந்ததன்று | — | *அன்று* |
| வந்தன அல்ல | — | *அல்ல* |
| வந்தேனல்லேன் | — | *அல்லேன்* |
| வந்தேமல்லேம் | — | *அல்லேம்* |
| வந்தாயல்லை | — | *அல்லை* |
| வந்தீரல்லீர் | — | *அல்லீர்* |

இவ்வாறே மற்றைக் காலங்களோடும் ஒட்டுக.

2. உடன்பாட்டு வினைமுற்றுக்களோடு இல்லை என்னுஞ் சொல்லைச் சேர்த்தாலும் எதிர்மறை வினைமுற்று ஆகும்.

| | |
|---|---|
| வந்தானில்லை | வந்ததில்லை |
| வந்தாரில்லை | வந்தனவில்லை |

| | |
|---|---|
| வந்தேனில்லை | வந்தாயில்லை |
| வந்தேமில்லை | வந்தீரில்லை |

3. இறந்தகால வினையெச்சத்தோடும், நிகழ்காலவினையில் கின்று இடைநிலையோடும், இலன், இலள், இலர், இலது, இல; இலேன், இலேம்; இலை, இலாய், இலீர் என்னுஞ் சொற்களைச் சேர்த்தால், இறந்தகால, நிகழ்கால எதிர்மறை வினைமுற்று ஆகும்.

| | | |
|---|---|---|
| வந்திலன் | — | இலன் |
| வந்திலள் | — | இலள் |
| வந்திலர் | — | இலர் |
| வந்திலது | — | இலது |
| வந்தில | — | இல |
| வந்திலேன் | — | இலேன் |
| வந்திலேம் | — | இலேம் |
| வந்திலை, வந்திலாய் | — | இலை, இலாய் |
| வந்திலீர் | — | இலீர் |

இவ்வாறே நிகழ்கால எதிர்மறைவினையை அமைக்க.

4. செய என்னும் வாய்பாட்டு எச்சச்சொல்லோடு இல்லை என்னுஞ் சொல்லைச் சேர்த்தாலும் எதிர்மறைவினை ஆகும்.

| | |
|---|---|
| அவன் வரவில்லை | நான் வரவில்லை |
| அவள் வரவில்லை | நாங்கள் வரவில்லை |
| அவர் வரவில்லை | நாம் வரவில்லை |
| அது வரவில்லை | நீ வரவில்லை |
| அவை வரவில்லை | நீங்கள் வரவில்லை |

இனி, வினைசெய்தலை மறுத்துக்கூறும் எதிர்மறை-வினைமுற்றுக்களில், பகுதியும் விகுதியுமே காணப்-படும்; எதிர்மறையை உணர்த்தும் ஆகார இடை-நிலை உயர்திணைவினையில் கெட்டுவிடும்; அஃறிணை-வினையில் கெடாதிருக்கும்.

| | |
|---|---|
| செய்யான் —(செய் + (ஆ) + ஆன்<br>செய்யாள் —(செய் + (ஆ) + ஆள்<br>செய்யார் —(செய் + (ஆ) + ஆர் | உயர்திணை வினையில் ஆ-கெட்டது. |
| செய்யாது —(செய் + (ஆ) + து<br>செய்யா —(செய் + (ஆ) + [1](அ) | அஃறிணையில் ஆ-கெடவில்லை. |

2. செய்வினை, செயப்பாட்டுவினை :

திருவள்ளுவர் திருக்குறளைச் செய்தார்

என்றால், திருவள்ளுவரைக்குறித்து அறிவது முக்கிய மாகும். இனி,

திருக்குறள் திருவள்ளுவரால் செய்யப்பட்டது

என்றால், திருக்குறளைக்குறித்து அறிவது முக்கிய மாகும். ஆகலின், முக்கியத்தைக் கருதி வினைச்-சொல்லை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவற்-றுள், முதலிற் கூறியதுபோல, செய்பவனுக்கு முதன்மை வரும் வினை செய்வினை எனப்படும்.

திருக்குறள் திருவள்ளுவரால் செய்யப்பட்டது

என்பதிறபோல, செயப்பட்டபொருளுக்கு முதன்மை வரும் வினை செயப்பாட்டுவினை எனப்படும். செய என்-

---

1. செய்யா என்பதில், அஃறிணைப் பன்மையை உணர்த்தும் அ—விகுதி புணர்ந்து கெட்டது.

னும் வாய்பாட்டு வினையெச்சத்தோடு படு என்பதைச் சேர்த்துச் சொல்லை அமைத்தால், செயப்பாட்டு வினை ஆகும்.

**3. தன்வினை, பிறவினை :**

ஒருபொருள் தானாகவே செய்யுந் தொழில் தன்வினை எனப்படும். அவ்வாறன்றி, பிறிதொரு பொருளின் ஏவலால் நடைபெறுந் தொழில் பிறவினை எனப்படும்.

மாணாக்கன் படிக்கின்றான்.
ஆசிரியர் மாணாக்கனைப் படிப்பிக்கின்றார்.

இவற்றுள், முதல்வாக்கியத்தில், படித்தல் மாணாக்கன் தானாகவே செய்யுந் தொழிலாகலின், அது தன்வினை யாயிற்று. இரண்டாம் வாக்கியத்தில், படித்தலாகிய தொழில் ஆசிரியரால் நடைபெறுகின்ற தாகலின், அது பிறவினை யாயிற்று.

பிறவினையில், தொழில் செய்யுங் கருத்தாவும், தொழில் செய்ய ஏவுங் கருத்தாவும் ஆக இரண்டு கருத்தா இருக்கும்.

ஆசிரியர் மாணாக்கனைப் படிப்பிக்கின்றார்

என்னும் வாக்கியத்தில்,

படித்தல்—மாணாக்கனது தொழில்.
படிக்கும்படி ஏவுதல்—ஆசிரியரது தொழில்.

ஆகலின்,

படித்தற்குக் கருத்தா—மாணாக்கன்.
படிப்பித்தற்குக் கருத்தா—ஆசிரியர்.

இவ்வாறே,

வண்டிக்காரன் மாட்டை ஓட்டினன்

என்றால்,

ஓடுதற்குக் கருத்தா—மாடு
ஓட்டுதற்குக் கருத்தா—வண்டிக்காரன்

பிறவும் இவ்வாறே காண்க.

எச்சம் :

1. உடன்பாட்டு வினையெச்சம் :

வந்து சேர்ந்தான்

என்பதில், வந்து என்பது உடன்பாட்டு வினையெச்சம்.

எதிர்மறை வினையெச்சம் :

செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தில் பகுதியை யடுத்து ஆ என்பதைச் சேர்த்தால், எதிர்மறை வினையெச்சம் ஆகும்.

செய்து - உடன்பாட்டு வினையெச்சம்
செய்யாது—(செய் + ஆ + து)—எதிர்மறை வினை-
[யெச்சம்

பகுதியோடு ஆ என்னும் எதிர்மறையிடைநிலையையும், அதனோடு மல், மே என்னும் விகுதிகளுள் ஒன்றனையுஞ் சேர்த்தாலும் எதிர்மறை வினையெச்சம் ஆகும்.

செய்யாமற் போனன்—(செய் + ஆ + மல்)
உண்ணுமே போனன்—(உண் + ஆ + மே)

2. உடன்பாட்டுப் பெயரெச்சம் :

வந்த மனிதன்

என்பதில், வந்த என்பது உடன்பாட்டுப் பெயரெச்சம்.

எதிர்மறைப் பெயரெச்சம் :

செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தில், பகுதியை அடுத்து ஆ என்னும் எதிர்மறையிடைநிலையைச் சேர்த்தால், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

செய்த —உடன்பாட்டுப் பெயரெச்சம்
செய்யாத(செய்+ஆ+த)—எதிர்மறைப்பெயரெச்சம்

# III. வாக்கியம்

**1. எழுவாய் முதலியவற்றைக் கண்டுபிடித்தல் :**

எல்லாவாக்கியங்களிலும் எழுவாய் பயனிலைகள் இருக்கும் ; சில வாக்கியங்களில் செயப்படுபொருளும் இருக்கும்.

நாம் எதனைப்பற்றிச் சொல்லுகின்றேமோ அது எழுவாய் ஆகும். அதனைப்பற்றி என்ன சொல்கின்றேமோ அது பயனிலை யாகும். பயனிலை பெரும்பாலும் வினைமுற்ரு யிருக்கும். எழுவாய் செய்யுந் தொழிலின் பயனை அடைவது செயப்படு-பொரு ளாகும்.

இராமர் தந்தையின் சொற்படி காட்டுக்குச் சென்ருர்.

இவ் வாக்கியத்தில், இராமரைப்பற்றிச் சொல்-லுகின்றேமாகலின் இராமர் எழுவாய். அவரைப்-பற்றிச் சொல்லியது சென்ருர் என்பது. அது பயனிலை.

வாட்காரன் மரத்தை அறுக்கின்ருன்.

இவ்வாக்கியத்தில் வாட்காரன் எழுவாய் ; அறுக்கின்-ருன் என்பது பயனிலை. அறுத்தலாகிய தொழிலின் பயனை அடைந்தது மரமாகலின் மரம் செயப்படு-பொருள்.

இனி, இவ்வாக்கியங்களில் எழுவாயைக் கண்-டறிதற்கு வேறெரு வழி உளது. வினைமுற்றுச்-

சொல்லின்மேல் யார் அல்லது எது என்னுஞ் சொல்லைச் சேர்த்துக் கேள்வி கேட்கவேண்டும். அதற்கு வரும் விடை எழுவாய் ஆகும்.

இராமர் மானை எய்தார்.

இவ் வாக்கியத்தில் எய்தார் என்னும் வினைமுற்றின்மேல் யார் என்னுஞ் சொல்லைச் சேர்த்து, 'யார் எய்தார்?' என்று கேளுங்கள். அதற்கு, இராமர் என்பது விடையாக வரும். ஆகலின், இராமர் என்பது எழுவாய்ச் சொல்.

இனி, செயப்படுபொருளைக் கண்டறிதற்கும் ஒரு வழி உளது. வினைமுற்றுச்சொல்லின்மேல் யாரை அல்லது எதனை என்னுஞ் சொல்லைச் சேர்த்துக் கேள்வி கேட்கவேண்டும். அதற்கு வரும் விடை செயப்படுபொருள் ஆகும். மேல் வாக்கியத்தில் உள்ள எய்தார் என்னும் வினைமுற்றின்மேல் எதை என்னுஞ் சொல்லைச் சேர்த்து, 'எதை எய்தார்?' என்று கேளுங்கள். மானை என்பது விடையாக வரும். ஆகலின், மான் என்பது செயப்படுபொருள்.

**கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களைக் குறிக்க.**

1. புத்தர் தம் பழைய சீடர்கட்குத் தமது கொள்கையை அறிவித்தார்.

2. ஐந்து திங்கட்குள் அறுபதின்மர் புத்தர்-மதத்தைப் பின்பற்றினர்.

3. புத்தர் அங்குச் சிலகாலம் தங்கியிருந்தார்.

4. புத்தர் ஒருகால் தம் பிதாவைக் கண்டார்.

5. பிம்பிசாரன் என்னும் அரசன் பெரிய வேள்வியொன்று நடத்தலாயினன்.

6. அச் செய்தியைப் புத்ததேவர் அறிந்தார்.

கீழ்வரும் செய்யுட்களில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருளைக் குறிக்க.

1. 'மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவின்.'

2. 'தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்-
[துயர்ந்தோர்
தம்மை மதியார்.'

3. 'நல்லோர்வரவான் நகைமுகங்கொண்
[டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.'

**2. சொல்லிலக்கணம் :**

சொற்றொடரி லிருக்குஞ் சொற்களுக்குப் பெயர், திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறி, முடிபும் கூறுதல் சொல்லிலக்கணம் கூறுத லாகும் ; வினைச்-சொற்களுக்குக் காலமும் கூறுதல் வேண்டும்.

இராமன் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்து வருகிறான். இச் சொற்றொடரில்,

| சொல் | பெயர் | திணை | பால் | எண் | இடம் | வேற்றுமை | முடிபு |
|---|---|---|---|---|---|---|---|
| இராமன் | பெயர்ச்சொல் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை | 1 | வருகிறான் என்பதைக் கொண்டு முடிகின்றது. |
| பள்ளிக்கூடத்திற்கு | பெயர்ச்சொல் | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை | 4 | போய் என்பதனோடு முடியும். |

| சொல் | பெயர் | திணை | பால் | எண் | இடம் | காலம் | முடிபு |
|---|---|---|---|---|---|---|---|
| போய் | வினையெச்சம் | — | — | — | — | இறந்தகாலம் | படித்து என்னும் வினையெச்சத்தோடு முடியும். |
| படித்து | வினையெச்சம் | — | — | — | — | இறந்தகாலம் | வருகிறான் என்பதனோடு முடியும். |
| வருகிறான் | வினைமுற்று | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை | நிகழ்காலம் | இராமன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது. |

# IV. புணர்ச்சி

மிகுதல் :

1. உயிரீற்றுச் சொற்களுக்குமுன், வல்லெழுத்து முதல்மொழி வரின் அவ் வல்லெழுத்து மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பலா | + | காய் | = | பலாக்காய் |
| அத்தி | + | காய் | = | அத்திக்காய் |
| ஈ | + | சிறகு | = | ஈச்சிறகு |
| வாழை | + | பழம் | = | வாழைப்பழம் |

2. வன்றொடர்க் குற்றியலுகரஈற்று வினையெச்சங்கட்குமுன் வரும் வல்லெழுத்து மிகும்.

பிடித்து + கொண்டான் = பிடித்துக் கொண்டான்.
கேட்டு + சிரித்தான் = கேட்டுச் சிரித்தான்.
விற்று + போனான் = விற்றுப் போனான்.

3. அகரஈற்று வினையெச்சத்திற்குமுன் வரும் வல்லெழுத்து மிக்கே வரும்.

உண்ண + கண்டேன் = உண்ணக் கண்டேன்.
படிக்க + தெரியும் = படிக்கத் தெரியும்.
உழ + போனான் = உழப் போனான்.

4. இகரஈற்று இறந்தகால வினையெச்சத்திற்குமுன்னும், யகரஈற்று இறந்தகால வினையெச்சத்திற்கு முன்னும் வல்லெழுத்து மிக்கே வரும்.

ஆடி + குதித்தான் = ஆடிக்குதித்தான்.
ஓடி + திரிந்தான் = ஓடித்திரிந்தான்.
எழுதி + படித்தான் = எழுதிப்படித்தான்.
} இகர ஈறு

போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்.-யகரஈறு

5. முற்றியலுகரவீற்றுப் பெயர்களுக்குமுன் வரும் வல்லெழுத்து மிகும்.

கணு + குறிது = கணுக் குறிது.
உருமு + கொடிது = உருமுக் கொடிது.
உழவு + சிறந்தது = உழவுச் சிறந்தது.

இயல்பு :

1. நெடிற்றொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர்: இத்தொடர்க் குற்றியலுகரவீற்றுக்குமுன் வரும் வல்லெழுத்து மிகாது.

ஆடு + குறிது = ஆடு குறிது.
வரகு + சிறிது = வரகு சிறிது.
மார்பு + பெரிது = மார்பு பெரிது.
எஃகு + கடிது = எஃகு கடிது.

உடம்படுமெய் :

உயிரீற்றுச் சொற்களுக்குமுன் உயிர்முதல்மொழி வரும்போது, ய அல்லது வ உடம்படுமெய்யாய் வரும். இரண்டு சொற்களை ஒருசொற்போலச் சேர்த்துச் சொல்லுமிடத்தில், உடம்படுமெய் இட்டே எழுதுதல் வேண்டும்.

மாவிலை, தெருவோரம், பனையோலை, கிளியலகு

வாக்கியங்களில், உயிரெழுத்தை இறுதியில் உடைய எழுவாய்க்குமுன்னும் செயப்படுபொருளுக்குமுன்னும் உயிர்முதன்மொழி வரின், உடம்படுமெய் இன்றி எழுதலாம்.

கிளி அழகானது.
நரி ஊளை இடும்.
நீ புத்தகத்தை எடு.

திரிதல் :

1. மொழிகளின் இறுதியில் நிற்கும் ள், ண் என்னும் மெய்யெழுத்துக்களுக்குமுன் வருந் தகாரம் டகாரமாகும்.

| | |
|---|---|
| வாள் + திறல் | = வாட்டிறல் |
| ஆண் + தகை | = ஆண்டகை |

2. மொழிகளின் இறுதியில் நிற்கும் ல், ன் என்னும் மெய்யெழுத்துக்களுக்குமுன் வருந் தகாரம் றகாரம் ஆகும்.

| | |
|---|---|
| கல் + தூண் | = கற்றூண் |
| முன் + தோன்றல் | = முற்றோன்றல் |

---

# V. அணி

**1.** உவமை :

ஒரு பொருளைப்பற்றிக் கூறும்பொழுது, அதனை விளக்குதற்காக, அறியப்பட்ட மற்றொரு பொருளை எடுத்துக்கூறுதல் உண்டு. அவ்வாறு கூறப்படுவது உபமானம் எனப்படும்.

உதாரணம்

'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே'

என்பதில், நல்லார்க்குச் செய்கிற உபகாரம் அவரால் மறக்கப்படாமல் எப்போதும் நிலையாக இருக்கும் என்பதை விளக்குதற்காக, கல்லின்மேல் எழுதப்பட்ட எழுத்து அழியாமல் நிலைநிற்பதை எடுத்துக் கூறியுள்ளார். நல்லார்க்குக் கல்லும், அவருக்குச் செய்த உபகாரத்திற்குக் கல்லில் எழுதிய எழுத்தும் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகலின்,

| உபமானம் | உபமேயம் |
|---|---|
| கல் | நல்லார் |
| எழுத்து | உபகாரம் |

பின்வரும் அடிகளில் உள்ள உபமான உபமேயங்களை நேர்நேரே குறிக்க.

(1) நற்றாமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.

(2) அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்.

2. உருவகம் :

உருவகம்—உபமான உபமேயங்களுக்கு உள்ள வேற்றுமையை ஒழித்து, அவ்விரண்டும் ஒன்றே என்று உபமானத்தின் தன்மையை உபமேயத்தில் ஏற்றிக் கூறுவது.

'தளிர்போன்ற கை' என்பதில், உபமானமாகிய தளிரும், உபமேயமாகிய கையும் வேறு வேறு பொருளாகக் கூறப்பட்டுள்ளன. அது உவமையாகும். அவ்வாறன்றி, 'கையாகிய தளிர்' என்று அவ்விரண்டற்கும் உள்ள வேற்றுமையை ஒழித்து, ஒன்று எனக் கூறுவது உருவகமாகும்.

'அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும்'

என்பதில், கையை மலர் என்றும், அடியைத் தளிர் என்றும், கண்ணை வண்டு என்றும் ஒற்றுமைப்படுத்திக் கூறியிருத்தல் காண்க.

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

இப்பாட்டில் உள்ள உருவகங்களை எடுத்தெழுதுக.

# மொழிப்பயிற்சி

ஒரு கருத்து முற்றுப்பெறும்படி சொற்கள் தொடர்ந்திருப்பின், அது வாக்கியம் ஆகும். வாக்கியம்—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என மூன்று பகுதியை உடையது; செயப்படுபொருள் இன்றியும் வாக்கியம் அமையும். இவற்றைப்பற்றிக் கீழ்வகுப்பில் கற்றிருக்கின்றீர்கள்.

**1. வாக்கியவகை :**

வாக்கியம் — செய்திவாக்கியம், வினவாக்கியம், கட்டளைவாக்கியம், உணர்ச்சிவாக்கியம் என்று நான்கு வகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் உடன்பாடு, எதிர்மறை என இரண்டு வகைப்படும். உ-ம்.

பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு இந்திய முதன்மந்திரி

என்பது ஒரு செய்தியைக் கூறுவதனால், அது செய்தி வாக்கியம் (Assertive sentence) ஆகும்.

ஜவாஹர்லால் நெஹ்ரு யார் ?

என்பது ஒரு பொருளைப்பற்றி வினவுவதனால், வினவாக்கியம் (Interrogative sentence) ஆகும். அது கேள்வி வாக்கியம் எனவும் படும்.

பாடத்தைப் படி

என்பது கட்டளை யிடுவதனால் கட்டளை வாக்கியம் (Imperative sentence) எனப்படும். அது ஏவல் வாக்கியம் எனவும் படும்.

அந்தோ! காந்தி! சுடப்பட்டார்!

என்பது உணர்ச்சியை வெளிப்படுத்துவதனால், உணர்ச்சி வாக்கியம் (Exclamatory sentence) ஆகும்.

| | உடன்பாடு | எதிர்மறை |
|---|---|---|
| செய்தி : | கண்ணன் படிக்கின்றான். | கண்ணன் படிக்கவில்லை. |
| வினா : | கண்ணன் படிக்கின்றானா ? | கண்ணன் படிக்கவில்லையா ? |
| கட்டளை : | கண்ணா, படி. | கண்ணா, படிக்காதே. |
| உணர்ச்சி : | என்ன அதிர்ஷ்டம் ! | அதிர்ஷ்டம் சிறிதும் இல்லையே ! |

பயிற்சி

பின்வருபவற்றுள் ஒவ்வொன்றும் எவ்வகை வாக்கியத்தைச் சார்ந்தது ? குறிக்க.

1. கம்பர் கவிச்சக்கரவர்த்தி.
2. மாலையில் ஓடி விளையாடு.
3. ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ ?
4. அந்தோ ! சரோஜினிதேவி மறைந்தார் !
5. ஈவது விலக்கேல்.

**2. வாக்கிய மாற்றம்**

**A. செய்திவாக்கியத்தை வினவாக்கியமாக மாற்றுதல் :**

குழந்தை விழுந்துவிட்டதா ?
குழந்தையா விழுந்துவிட்டது ?

என்னும் வாக்கியங்களில் வினப்பொருளை உணர்த்துஞ் சொல் யாது ? விழுந்துவிட்டதா ?

குழந்தையா? என்பவற்றின் ஈற்றில் உள்ள ஆ என்பது. ஆ-வினாப்பொருளை உணர்த்தும் இடைச்சொல். இதைத் தவிர, ஓ என்பதும் வினாப்பொருளை உணர்த்தும். அது கூறும் முறையில்தான் விளங்கும்.

குழந்தை விழுந்துவிட்டதோ?
குழந்தையோ விழுந்துவிட்டது?

என்பன காண்க.

அன்றியும், வாக்கியத்தில் எழுவாய் விடையாக வரவேண்டுமாயின், வினைமுற்றின்மேல், யார், எவன், எவள், எது, எவை என்பவற்றுள் ஒன்றை இடத்துக்கு ஏற்றவாறு அமைத்து வினவுகின்றோம்; செயப்படுபொருள் வரவேண்டுமாயின், வினைமுற்றின் மேல் யாரை, எதனை, எவற்றை முதலியவற்றுள் ஏற்றவாறு ஒன்றை அமைத்து வினவவேண்டும். இவற்றைப்போல இடம், காலம், காரணம் இவற்றை விடையாகப் பெறவேண்டுமாயின், முறையே எங்கே, எப்பொழுது, ஏன்: இவற்றை அமைத்து வினவவேண்டும். பிறவும் இவ்வாறு கண்டுகொள்க.

இராஜராஜ சோழன் சிவபெருமான்மீது கொண்ட பக்தியால் பத்தாம் நூற்றாண்டில் தஞ்சையில் பெரியகோயிலைக் கட்டுவித்தான்.

இதில், கட்டுவித்தான் என்பது வினைமுற்று. அதற்குமேல் எவன் என்பதை அமைத்து, "எவன் கட்டுவித்தான்?" என்று வினவின், இராஜராஜன் என்பது விடையாய் வரும். இம் முறையே பிறவற்றையும் காண்க.

எதைக் கட்டுவித்தான் ?—பெரியகோயிலை
எங்கே ? ,, —தஞ்சையில்
எப்பொழுது ,, —பத்தாம்நூற்ருண்டில்
ஏன் ? ,, —சிவபெருமான் மீது கொண்ட பக்தியினுல்

[எல்லா வாக்கியங்களிலும் இக்கேள்விகள் எல்லாம் பொருந்துதல் இல்லை. அவற்றை இடம் நோக்கி அறிந்து கொள்ளவேண்டும்.]

உ-ம் :

1. அறுமுகன் சூரனை அழித்தான்.
   (a) சூரனை அழித்தவன் யார் ?
   (b) அறுமுகன் யாரை அழித்தான் ?
   (c) அறுமுகன் சூரனை யாது செய்தான் ?

2. சீவகன் மதயானையை அடக்கினுன் ?
   (a) எவன் மதயானையை அடக்கினுன் ?
   (b) சீவகன் எதை அடக்கினுன் ?
   (c) சீவகன் மதயானையை யாது செய்தான் ?

3. சிங்கம் இரவில் இரைதேடும் ?
   (a) எது இரவில் இரைதேடும் ?
   (b) சிங்கம் எப்பொழுது இரைதேடும் ?
   (c) சிங்கம் இரவில் என்ன செய்யும் ?

4. கண்ணன் டில்லிக்கு ஆகாய விமானத்தில் சென்ருன்.

(a) ஆகாயவிமானத்தில் டில்லிக்குச் சென்றவன் யார்?
(b) கண்ணன் ஆகாயவிமானத்தில் எங்குச் சென்றான்?
(c) கண்ணன் எவ்வாறு டில்லிக்குச் சென்றான்?
(d) கண்ணன் டில்லிக்கு ஆகாயவிமானத்திலா சென்றான்?

5. இன்று, தங்கைக்குக் கலியாணமாகலின், கண்ணன் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை.
(a) கண்ணன் இன்று ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை?

6. மோட்டார் வாங்க உனக்கு மூவாயிரம் ரூபாய் வேண்டும்.
(a) மோட்டார் வாங்க எத்தனை ரூபாய் வேண்டும்?
(b) உனக்கு ஏன் 3000 ரூ. வேண்டும்?

பயிற்சி

விைவாக்கியமாக மாற்றுக.

1. பூனை இரவில் எலியைப் பிடிக்கும்.
2. கண்ணகி மதுரையை அழித்தாள்.
3. நடேசன் ஊருக்கு நடந்து சென்றான்.
4. வேலை முடிந்தவுடன் வீட்டுக்குப் போவேன்.
5. உனக்கு ஒரு வீடுகட்டப் பதினாயிரம் ரூபாய் வேண்டும்.
6. நான் மாலை ஏழுமணிக்கு ஊருக்குப் புறப்படுகின்றேன்.

பெரிய எழுத்துக்களில் உள்ள சொற்கள் விடையாக வருமாறு வினக்களை அமைக்க.

1. இலக்குவன் அண்ணனோடு காட்டுக்குச் சென்ருன்.

2. ராஜா அண்ணுமலைச் செட்டியார் அண்ணுமலை நகரில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்துள்ளார்.

3. மகாத்மா காந்தி **1948** ஜனவரி மாதம் **30**-ஆந் தேதி மண்ணுலகை விட்டு மறைந்தார்.

4. இரவில் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு விலங்குகள் நடுநடுங்கி அங்கும் இங்கும் ஓடும்.

5. நீர்வேட்கையால் வாடுபவனுக்குச் சோற்றைக் கொடுத்தலால் பயனில்லை.

6. கடவுளைத் தொழுதலே கல்வியின் பயன்.

B. வினவாக்கியத்தைச் செய்திவாக்கியமாக மாற்றுதல் :

வினவாக்கியங்களுள் சில, உடன்பாடு எதிர்மறை இரண்டனுள் ஒன்றை விடையாகப் பெற்று வரும்; சிலவற்றுக்கு உடன்பாட்டிலேயே விடையளிக்க முடியும்; சிலவற்றுக்கு எதிர்மறையிலேயே விடையளிக்க முடியும்.

1. நீ குற்ருல அருவியில் நீராடியிருக்கின்ருயா?
நீராடியிருக்கின்றேன்; (அல்லது) நீராடவில்லை (இரண்டனுள் ஒன்று).

2. பெற்றோரைப் பேணுவது புத்திரர்கடமை அன்றோ?—புத்திரர் கடமையே (உடன்பாடு).

3. ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ?—வாரார் (எதிர்மறை).

பயிற்சி

செய்திவாக்கியமாக மாற்றுக ;

1. தாயை விரும்பாத சேயும் உண்டோ?
2. கல்லிலிருந்து நார் உரிக்கமுடியுமா?
3. கோவலன் ஏன் மதுரைக்குச் சென்றான்?
4. இந்தியா எப்பொழுது சுதந்திரம் பெற்றது?
5. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?
6. கடலை எவ்வாறு கடந்து செல்கின்றனர்?

உடன்பாட்டுவாக்கியத்தை எதிர்மறைவாக்கியம் ஆக்குதல் :

உடன்பாட்டு வாக்கியம்—தொழில் நிகழ்ச்சியைக் கூறும்.

அண்ணன் படிக்கின்றான்.
நான் எழுதுகின்றேன்.

எதிர்மறை வாக்கியம்—(1) தொழில் நிகழாமையையும், (2) தொழிலை மறுத்தலையும் உணர்த்தும்.

1. அண்ணன் படித்திலன் (படிக்கவில்லை)—நிகழாமை.
2. நான் எழுதேன் (எழுதமாட்டேன்)—மறுத்தல்.

உ-ம் :

| | உடன்பாடு | எதிர்மறை |
|---|---|---|
| 1. | கண்ணன் உறங்கினான். | கண்ணன் உறங்கிலன்; உறங்கவில்லை. |
| 2. | கோதை பாடுகின்றாள். | கோதை பாடுகின்றிலள்; பாடவில்லை. |
| 3. | நான் பரீட்சையில் தேர்ந்தேன். | நான் பரீட்சையில் தேர்ந்திலேன்; தேர்ச்சி பெறவில்லை. |
| 4. | நான் மருந்து உண்கின்றேன். | நான் மருந்து உண்ணேன். |
| 5. | அவன் ஊருக்குப் போவான். | அவன் ஊருக்குப் போகான். |
| 6. | இவ் வெருமை பால் கறக்கும். | இவ் வெருமை பால் கறக்காது. |

### பயிற்சி

எதிர்மறைவாக்கியங்களாக மாற்றுக :

1. லீலாவதி அழகாகக் கோலம் போடுகின்றாள்.
2. கோபாலன் இனிமையாகப் பாடுகின்றான்.
3. ஆற்றில் வெள்ளம் பெருகுகின்றது.
4. நீ நன்கு படிக்கின்றாயா?
5. அவனைத் தோட்டத்தில் பார்க்கலாம்.
6. முருகன் நாள்தோறும் பத்துமைல் நடந்தான்.

பயிற்சி

எதிர்மறை வாக்கியங்களை, பொருள் மாறுதபடி உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக :

உ-ம் :

1. செல்வர் எப்போதும் இன்பத்தோடு இருப்பதில்லை.

   செல்வர் சில சமயம் துன்பப்படுவதும் உண்டு.

2. ராமமூர்த்தி ஸாண்டோவைத் தவிர வேறு எவரும் அக் கல்லைத் தூக்கமுடியாது.

   ராமமூர்த்தி ஸாண்டோதான் அக் கல்லைத் தூக்க முடியும்.

1. முள் இல்லாத ரோஜாமலர் இல்லை.
2. செங்குட்டுவன் வெற்றிபெறுத போரே இல்லை.
3. ஆண்டவன் அன்பர்களுக்கு உதவாமலிரான்.
4. மின்னலின்றி இடியில்லை.
5. திருக்குறளைப் படிக்காமல் இராதே.
6. உலகில் குற்றமே இல்லாதவர் யார்?

(iii) A. தனிவாக்கியங்களைத் தொடர்நிலைவாக்கியமாக மாற்றுதல் :

ஒத்த முதன்மையுடைய தனிவாக்கியங்கள் பலவற்றுள், இரண்டாம்வாக்கியம் முதலியவற்றில் உள்ள

எழுவாயை நீக்கிவிட்டு எழுதினல் அவை தொடர்நிலைவாக்கியம் ஆகும்; ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் அரைப்புள்ளி இடல்வேண்டும்; இறுதியில் முற்றுப்புள்ளி இடல் வேண்டும்.

பயிற்சி

கீழ் வருந் தனிவாக்கியங்களைத் தொடர்நிலை வாக்கியம் ஆக்குக:

1. மகாத்மா காந்தி தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்டார். அவர் ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்க முயன்ருர்.

2. இராமன் காட்டுக்குப் போதலை யறிந்து இலக்குவன் சினங்கொண்டான். அவன் கச்சை கட்டினன். அவன் உடைவாளைச் செருகினன். கண்டோர் அஞ்சும்படி அவன் புறப்பட்டான்.

**தனிவாக்கியங்களைக் கலவைவாக்கியம் ஆக்குதல்:**

முக்கியமல்லாத வாக்கியத்தில் வினைமுற்றை எச்சமாக்கி, முக்கியமான வாக்கியத்தோடு சேர்த்தால் கலவைவாக்கியம் ஆகும்.

**உ-ம்:**

இலக்குவன் சினங்கொண்டான். அப்பொழுது இராமர் அவன்சினத்தைத் தணித்தார்.

இலக்குவன் சினங்கொள்ள, இராமர் அவன்சினத்தைத் தணித்தார்.

ஒருவன் தீங்கு செய்கின்றான்; அதன் பலனைப் பலர் அடைகின்றனர்.

ஒருவன் தீங்கு செய்யின், அதன் பலனைப் பலர் அடைகின்றனர்.

பயிற்சி

கீழ்வருந் தனிவாக்கியங்களைக் கலவைவாக்கியம் ஆக்குக:

1. மக்கள் தம்முட் கலகம் விளைத்தனர். அதனால் மஹாத்மா உண்ணாவிரதம் இருந்தார்.
2. மஹாத்மா தீண்டாமையை ஒழிக்க முயன்றார். அச்செயலை நாமும் மேற்கொள்ளல் வேண்டும்.
3. இப் பாதகர் அறியாமல் பழிமொழி கூறினர். அதனைத் தாங்கள் பொறுத்தருள்க.

(iv) நீண்ட வாக்கியங்களைச் சிறுவாக்கியங்க ளாக்குதல்:

நீண்ட வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு வினையெச்சத்தையும், ஒவ்வொரு பெயரெச்சத்தையும் வினைமுற்றாக மாற்றினால், அத்தனைச் சிறுவாக்கியங்கள் ஆகும்.

உ-ம்:

நீண்ட வாக்கியம்:

போர்க்களத்தில் தன் மகன் மார்பில் வேல் பாய்ந்து இறந்த செய்தியைச் செவியுற்ற தாய் மிக மகிழ்ந்தாள்.

சிறு வாக்கியங்கள் :—போர்க்களத்தில் ஒரு வீரன்-மார்பில் வேல் பாய்ந்தது. அதனால் அவன் இறந்-தான். அச் செய்தியை அவன்தாய் செவியுற்றாள். அவள் மிக மகிழ்ந்தாள்.

பயிற்சி

**சிறுவாக்கியங்களாக** மாற்றுக :

1. தண்ணீரைக் குடித்தபொழுது தன் கொம்பை நிழலில் கண்டு மகிழ்ந்த கலை-மான், பின்னர் வேட்டைநாயால் துரத்-தப்பட்டுக் கொம்பு மரத்தில் சிக்குண்ட-பொழுது வருந்திற்று.
2. திருக்குறளில் உள்ள எல்லாப் பாட்டுக்களை-யும் மனப்பாடம் பண்ணி, பொருளையும் நன்கு அறிந்துகொண்டதனால், அப் புலவர் சிறந்த அறிவும் சொல்வன்மை-யும் ஒழுக்கமும் பெற்று, பெரும் புக-ழொடு விளங்குகின்றார்.
3. பண்டித ஜவாஹர்லால்நெஹ்ரு தம்நலங் கருதாமல் நாட்டிற்கே உழைத்துப் பல-முறை சிறைப்பட்டும் விடாமல் தொண்டு புரிந்து வந்ததனால், உலகம் முழுதும் அவரைப் புகழ்கின்றது.

**3. வழூஉச்சொற்களும் திருத்தமும் :**

சில சொற்கள் உலகவழக்கில் தவறாக வழங்கு-கின்றன. சில சொற்கள் குறைவான கல்வியுடை-யவர்களால் தவறாக எழுதப்படுகின்றன. சில வட-

மொழிச்சொற்களும் தவறாகவே எழுதப்படுகின்றன. இப்படிப்பட்டவற்றை நீக்கவேண்டும்.

| தவறான சொல் | சரியான சொல் |
|---|---|
| நஞ்சை | நன்செய் |
| புஞ்சை | புன்செய் |
| ஊரணி | ஊருணி |
| இலுப்புப்பெட்டி | இருப்புப்பெட்டி |
| ஆப்பை | அகப்பை |
| திருவிஷா | திருவிழா |
| அருகாமையில் | அருகில் |
| பார்க்கடல் | பாற்கடல் |
| காக்ஷி | காட்சி |
| மாக்ஷிமை | மாட்சிமை |
| கோர்வை | கோவை |
| எண்ணை | எண்ணெய் |
| வெண்ணை | வெண்ணெய் |
| முன்னூறு | முந்நூறு |
| நாநூறு | நானூறு |
| சிலவு | செலவு |
| இருபத்தியேழு | இருபத்தேழு |

வடசொல்

| | |
|---|---|
| (கருட) சேர்வை | சேவை |
| திரேகம் | தேகம் |
| வியாதியஸ்தர் | வியாதிஸ்தர் |
| நிச்சயதார்த்தம் | நிச்சிதார்த்தம் |
| கற்பூரம் | கர்ப்பூரம் |

4. சொற்பொருத்தம்

வாக்கியங்களில் பொருளுக்கு அமைதியான சொற்களை அறிந்து எழுதுதல் வேண்டும்.

வருதல், போதல்

வருதல் என்னுஞ் சொல்லைத் தன்மை முன்னிலைகளிலும், போதல் என்னுஞ் சொல்லைப் படர்க்கையிலும் வழங்குதல் வேண்டும்.

உ-ம் :

தன்மை

நீ எங்கள் வீட்டுக்கு எப்போது வந்தாய் ?

முருகன் என்னிடம் வருவான்.

முன்னிலை

நான் நேற்று உங்கள் வீட்டுக்கு வந்தேன்.

முருகன் உன்னிடம் வருவான்.

படர்க்கை

நீ பம்பாய்க்கு எப்போது போவாய் ?

நான் பம்பாய்க்கு அடுத்தவாரம் போவேன்.

பகைவர் போர்புரிய வருதலை யறிந்த செழியன் அமைச்சரையும் படைத்தலைவரையும் வருவித்து, அவர்க்குத் தன் கருத்தினைத் தெரிவிக்கலானான்.

இராமர் காட்டுக்குப் புறப்பட்டதை யறிந்து சீதையும் இலக்குவனும் அவரைப் பின்தொடர்ந்து போயினர்.

தருதல், கொடுத்தல்

தருதல் என்னுஞ் சொல்லைத் தன்மை முன்னிலைகளிலும், கொடுத்தல் என்னுஞ் சொல்லைப் படர்க்கையிலும் வழங்குதல் வேண்டும்.

அவர் எனக்கு ஒரு புஸ்தகம் தந்தார்.

அவர் உனக்கு என்ன தந்தார்?

வடகலிங்கத்தரசன் இருமுறை திறை தந்திலன்.

உன் புஸ்தகம் யாருக்குக் கொடுத்தாய்?

நான் என் நண்பனிடஞ் சென்றால், அவன் எனக்குப் பலவகைப்பட்ட உணவுகளைத் தருவான்.

அரசன் உமக்குத் தந்த அரசை வஞ்சனையாற் கவர்ந்து உம்மைக் காட்டுக்குப் போக்கினளே!

புலி முதலிய கொடிய விலங்குகளும் தம் இளங்குருளைகட்கு இரைதேடிக் கொணர்ந்து கொடுக்கும்.

அழைத்தல்:

அழைத்தல் என்னுஞ் சொல், தம்மிடம் வருமாறு ஒருவரை மரியாதையாக வேண்டிக்கொள்ளுமிடத்தும் அவ்வாறு கூட்டிக்கொண்டு செல்லுமிடத்தும் உபயோகித்தற்கு உரியது.

'கங்கைக்கரையில் தவம்புரிந்திருந்த இருடிகள் அவர்களை (இராமர்முதலியோரை)த் தங்கள் பர்ணசாலைக்கு அழைத்துப் போயினர்' என்பது காண்க.

'ராஜ ராஜேசுரம் என்பது இக்காலத்தில் தாராசுரம் என்று அழைக்கப்படுகின்றது' என்பது தவறு; வழங்கப் படுகின்றது என்பது சரி.

ஓர், ஒரு

உயிர்முதன்மொழி வரும்போது [1]ஒன்று என்பது ஓர் என்று திரிந்து நிற்கும்; மெய்முதன்மொழி வரும்போது ஒரு என்று நிற்கும். உ-ம்:

ஓர் ஊர்; ஓர் அரசன்; ஒரு குதிரை.

5. வாக்கியப்பிழையும் திருத்தமும்:

ஒரு பத்தியில் உள்ள வாக்கியங்களுள் ஒவ்வொன்றற்கும் பொருள்தொடர்பு இருத்தல் வேண்டும். வாக்கியத்தில் இருக்குஞ் சொற்கள் தமக்கு உரிய சொற்களோடு முடிதல் வேண்டும். இவ்வாறு அமையாத வாக்கியம் பிழை உடையதாகும்.

1. 'சோழ வளநாடு ஆகையால் காவிரிப் பாய்ச்சலால் நெல் மிக்க விளைவு உள்ளது என்பது எக்காலத்தும் உண்மைச் செய்தியாம்.'

இவ் வாக்கியத்தில், ஆகையால் என்னுஞ் சொல் இருத்தல் அமைதியன்று. அதனை நீக்கிவிட வேண்டும்.

2. 'நீ குறிப்பிட்ட காலத்தில் அங்கு வர முயற்சிக்கிறேன்.'

---

1. ஆங்கிலத்தில் an என்றும் a என்றும் வருதலை ஒப்பிடுக.

இவ் வாக்கியத்தில், முயற்சிக்கிறேன் என்பது தவறு. முயல்கின்றேன், அல்லது முயற்சி செய்கின்றேன் என்று எழுதுதல் வேண்டும்.

3. 'தங்கள்நலனைத் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.'

இவ் வாக்கியம், 'தங்கள்நலனைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்' என்று இருத்தல் வேண்டும்.

**6. நிறுத்துக்குறிகள் :**

புஸ்தகங்களை வாசிப்பவர் வாசிக்கும்போதே பொருளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்காகச் சில அடையாளங்களை அமைத்திருக்கின்றனர். நாம் எழுதும்போதும் அவற்றை இடம் நோக்கி இடுதல் வேண்டும்.

முற்றுப்புள்ளிமுதலியவற்றைப்பற்றிச் சில-வற்றைக் கீழ்வகுப்பில் அறிந்திருக்கின்றோம். இங்கு அவற்றோடு இன்னுஞ் சிலவற்றை அறிவோம்.

1. (.) இது முற்றுப்புள்ளி எனப்படும். இதனை வாக்கியமுடிவில் இடல் வேண்டும்.

2. (,) இது காற்புள்ளி. வாக்கியத்தின் இடையே சிறிதளவு நிறுத்தவேண்டிய இடங்களில் இதனை இடுவர்.

(1) ஒரே முடிபினைப் பெறுகின்ற பல சொற்-களின் வரிசையில் ஒவ்வொரு சொல்லுக்கும்

இடையே காற்புள்ளி இடப்படும். ஆனல், கடைசிச் சொல்லை அடுத்து இடுதல் இல்லை. உ-ம் :

அத் தோட்டத்தில் வாழை, மா, பலா, தென்னை முதலிய மரங்கள் வளர்ந்து செறிந்திருந்தன. (கடைசிச்சொல்லாகிய தென்னை என்பதை யடுத்துக் காற்புள்ளி இல்லாதிருத்தலை அறிக.)

(2) இரண்டு சொற்கள் ஒரு தொடராய் அமைந்து பல தொடர்கள் வரும்போது ஒவ்வொரு தொடருக்கும் பக்கத்தில் இது வரும்.

கற்றவன் கல்லாதவன், பணக்காரன் எளியவன், உயர்ந்தவன் தாழ்ந்தவன்—எல்லாரும் எம் சகோதரரே என்று நினையுங்கள்.

(3) விளிவேற்றுமைக்குப் பக்கத்தில் பெரும்பாலும் இவ் வடையாளம் இடப்படும். (யாதேனும் ஓர் உணர்ச்சி தோன்ற விளிக்குமிடத்தே உணர்ச்சிக்குறி இடப்படும்.)

'அன்னையினும் அன்பு மிக்க ஐயனே, யான் சொல்வதைக் கேட்பாயாக.'

(4) வாக்கியத்தின் இடையே ஒருவரை நோக்கி நேர்முகமாகக் கூறுமிடத்து, முதலில் இது இடப்படும்.

பரதன் இராமரை நோக்கி, "ஐய, தாம் அயோத்திக்கு வந்து முடிசூடி அரசாளவேண்டும்" என்று வேண்டினன். (இதில், ஐய என்பதற்குமேல் (,) இட்டிருப்பது காண்க.)

(5) பின்னர், ஆகலின், ஆயினும், அன்றியும், எனினும், மற்றும், மேலும், அதனுல்: இவை போன்ற சொற்களை அடுத்து இக் குறியை இடல்-வேண்டும்.

உ-ம் :

மாலையில் பொழுது. போகும்வரை விளையாடு; பின்னர், வீட்டுக்கு வந்து பாடங்களைப் படி.

'யான் எவர்க்கும் அஞ்சுவேனல்லேன். ஆக-லின், தாம் ஏவியவற்றைத் தவருது முடிப்பேன்.'

(6) நீண்ட வாக்கியத்தில் வரும் வினையெச்சத்-திற்குப் பின்னர் இக் குறியை இடின், பொருள் நன்கு விளங்கும். உ-ம் :

'லிவிங்ஸ்டன் தென்னுபிரிக்காவில் சமயத்-தொண்டினை ஆற்றச் சென்று, நீக்ரோவர்மொழி-யைக் கற்றுணர்ந்து, பலவிடங்களில் நீக்ரோஇளை-ஞர்களுக்குக் கல்வியறிவை ஊட்டி, மருத்துவவுதவி-யும் ஆற்றினர்.'

(7) ஒரு வாக்கியத்தினுள் மற்றொரு வாக்கியம் வந்து அமையுமாயின், அவ் வாக்கியத்தின் முன்னும் பின்னும் இக் குறியை இடல்வேண்டும். உ-ம் :

'குக்கைக் கண்ட ஹவாய்த்தீவினர், திரும்பி வருவதாகக் கூறிய தம் தெய்வமே திரும்பிவந்தது, என்று எண்ணி, அவருக்கு அபிஷேகம் செய்தனர்.'

3. (;) இஃது அரைப்புள்ளி. இது தொடர்-நிலை வாக்கியங்களின் முடிவில் இடப்படும். உ-ம் :

ஒரு நரி காட்டில் பசியினல் வருந்தி அங்கும் இங்கும் அலைந்தது; கடைசியில் ஒரு திராட்சைக்-

குலையைக் கண்டது ; அதைப் பறிக்கப் பல முறை எட்டிப் பார்த்தது ; முடியாததனால், அந்தப் பழம் புளிக்கும் என்று கூறிக்கொண்டே போயிற்று.

4. (:) :—இது முக்காற்புள்ளி.

(1) மேற்கோளை எடுத்துக்காட்டும் பொழுது, இதனை இடல் வேண்டும். (இதன்பின் கோடு இடுதலும் உண்டு.) உ-ம் :

வள்ளுவர் கூறுவது : "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு" என்பது.

(2) ஒன்றன் பகுதியை எண்ணிக் கூறுமிடத்து இஃது இடப்படும். உ-ம் :

வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் : இம் மூன்றும் வினைச்சொல்லின் வகை யாகும்.

5. (?) இது வினாக்குறி.

வினாவா யிருக்கும் வாக்கியங்களின் முடிவில் இதனை இடுவர். உ-ம் :

வாசுதேவர் சகாதேவனை நோக்கி, "நீ ஏன் அவ்வாறு கூறினை? பாரதப்போர் நடக்காதிருத்தற்கு யாது செய்யலாம்?" என்று வினவினர்.

6. (!) இது உணர்ச்சிக்குறி.

மகிழ்ச்சி, துன்பம், வியப்பு முதலிய உணர்ச்சி தோன்றுமிடங்களில் இஃது இடப்படும்.

அனுமான் சீதாதேவியை வணங்கி, "தாயே! மங்களம்! மங்களம்!!" என்று கூறி நற்செய்தியை அறிவித்தான்.

"அந்தோ! மிக்க புகழ் படைத்த இவ் வரசகுலம் என்னால் பெரும்பழி அடைந்ததே!" என்று பாண்டியன் நெடுஞ்செழியன் வருந்தினான்.

"பூனை பால் குடிக்காதா!" என்றார் இராயர்.

7. மேற்கோட் குறி.

இது இரட்டைக் குறி ("—"), ஒற்றைக் குறி ('—') என்று இருவகைப்படும்.

இரட்டைக் குறி :

1. ஒருவர் கூறிய சொற்களை அப்படியே எடுத்தாளும்பொழுது, அச் சொற்களின் தொடக்கத்திலும் முடிவிலும் இக் குறி இடப்படும்.

உ-ம் :

நெடுஞ்செழியன், "இப் போரில் வெல்லேனாயின், என் குடிகள் கொடுங்கோலன் என்று என்னைத் தூற்றுவாராக," என்று சூளுரைத்தான்.

2. பழமொழி முதலியவற்றை எடுத்தாளுமிடத்திலும் இவ் வடையாளம் வரும்.

யானைத் தந்தம் அதிக விலைபெறும். அதனால், "யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்னும் பழமொழி வழங்கி வருகின்றது.

ஒற்றைக் குறி :

மேற்கோளுக்குள் மேற்கோள் வரின், அதற்கு முன்னும் பின்னும் ஒற்றைமேற்கோட்குறி இடப்படும். உ-ம் :

நெடுஞ்செழியன்போரை நோக்கிய இடைக்குன்றூர் கிழார், "இவன் பகைவரை இறுகப்பற்றி மண்ணில் மோதி விண்ணுக்கு அனுப்புகின்றான். 'இத்தனை வீரரைக் கொன்றோமே!' என்று செருக்குக்கொள்ளவில்லை" என்று புகழ்ந்தார்.

பயிற்சி

ஏற்ற நிறுத்துக்குறிகளை அமைக்க.

1. ஒரு திருடன் தென்னந்தோப்பில் நுழைந்தான் ஒரு தென்னைமரத்தில் ஏறினன் உச்சியில் ஏறியபொழுது தோப்புக்குச் சொந்தக்காரன் வருவதைக் கண்டான் அதனல் கீழே இறங்கினன் சொந்தக்காரன் நீ ஏன் தென்னை மரத்தில் ஏறிய் என்று கேட்டான் திருடன் புல் பிடுங்க ஏறினேன் என்றான் சொந்தக்காரன் தென்னைமரத்தில் புல் இருக்குமா என்று கேட்டான் அதனல்தான் கீழே இறங்கிவிட்டேன் என்று சொல்லிக்கொண்டே போனன் திருடன்

2. ஆ ஆ வீடு தீப்பற்றி எரிகின்றதே ஓடுங்கள் தண்ணீரைக் கொண்டு வாருங்கள் என்று மக்கள் கூவினர்

3. வாயடக்கம் இல்லாவிடின் தீங்கு வருவது உறுதி நுணலும் தன்வாயால் கெடும் என்னும் பழமொழி உனக்குத் தெரியாதா

7. வல்லெழுத்து மிகுமிடம் :

(1) உயிர்முன் மெய்

1. அ, இ என்னுஞ் சுட்டெழுத்துக்களுக்கு முன்னும், எ என்னும் வினாவெழுத்துக்கு முன்னும் வரும் க, ச, ஞ, த, ந, ப, ம, வக்கள் மிகும்.

| | | | |
|---|---|---|---|
| அ— | அ + குளம் = அக்குளம் | சுட்டு |
| | அ + சோலை = அச்சோலை | |
| | அ + ஞாண் = அஞ்ஞாண் | |
| இ— | இ + தெரு = இத்தெரு | |
| | இ + நாடு = இந்நாடு | |
| | இ + பக்கம் = இப்பக்கம் | |
| எ— | எ + மலை = எம்மலை ? | வினா |
| | எ + வழி = எவ்வழி ? | |

என, க—முதலிய எட்டெழுத்தும் மிக்கு வந்தன காண்க.

1. அந்த, இந்த, எந்த என்னுஞ் சொற்களுக்கு முன் க, ச, த பக்கள் மிகும்.

அந்த + குளம் = அந்தக்குளம்
அந்த + சிறுவன் = அந்தச்சிறுவன்
இந்த + தோட்டம் = இந்தத்தோட்டம்
எந்த + பக்கம் = எந்தப்பக்கம் ?

3. அப்படி, இப்படி, எப்படி என்னுஞ் சொற்களுக்குமுன் க, ச, த, பக்கள் மிகும்.

அப்படி+கூறினன் =அப்படிக் கூறினன்
இப்படி+சொன்னன்=இப்படிச் சொன்னன்
எப்படி +தெரியும் =எப்படித் தெரியும்?
எப்படி +படித்தான் =எப்படிப் படித்தான்?

4. இரண்டாம்வேற்றுமையுருபிற்குமுன் வல்லெழுத்து முதன்மொழி வரின், அவ் வல்லெழுத்து மிக்கே வரும்.

அவனை +கண்டான் =அவனைக் கண்டான்
கோயிலை +சுற்றினன் =கோயிலைச் சுற்றினன்
கடவுளை +தொழுதான்=கடவுளைத் தொழுதான்
பாடத்தை+படித்தான் =பாடத்தைப் படித்தான்

5. நான்காம் வேற்றுமையுருபிற்கு முன்னும் க, ச, த, ப மிகும்.

பிள்ளைகட்கு+கற்பி =பிள்ளைகட்குக் கற்பி
ஏழைகட்கு +சோறு இடு=ஏழைகட்குச் சோறு இடு
எனக்கு +தா =எனக்குத் தா
கோயிலுக்கு+போ =கோயிலுக்குப் போ

வல்லெழுத்து மிகாத இடம்

1. உயர்திணைப்பெயரின் ஈற்று உயிரெழுத்துக்கு முன் வரும் வல்லெழுத்து மிகாது.

சீதை கணவனேடு சென்ருள்.
கௌசலை பரதனைத் தேற்றினள்.

2. பெயரெச்சங்கட்குமுன் வரும் வல்லெழுத்து மிகாது.

வந்த சிறுவன்
வருகின்ற குதிரை

3. மூன்றும் வேற்றுமையுருபிற்கு முன்னும், ஆறும்வேற்றுமையுருபிற்கு முன்னும் வரும் வல்லெழுத்து மிகாது.

இலக்குவன் இராமனெடு சென்ருன்.
இராமர் தமது தேரில் ஏறினர்.

பயிற்சி

மிகவேண்டிய இடத்தில் வல்லெழுத்தை இடுக: மிக வேண்டாத இடத்தில் நீக்குக.

கரிகாலன் காட்டை கெடுத்து நாடாக்கினன்; நீர்நிலைகள் தோண்டுவித்தான்; காவிரிக்கு கரை கட்டுவித்தான்; தன் படையை பெருக்கினன்; தன்னை புகழ்ந்து பாடியப் புலவருக்கு பரிசில் அளித்தான்; தன்னை பகைத்த சிற்றரசர்களை வென்று திறைகட்ட செய்தான். கரிகாலன் மிக சிறந்தச் சோழமன்னன் என்ற புகழொடுச் செங்கோல் செலுத்திவந்தான்.

## 1. கட்டுரைப்பயிற்சி (Composition)

**A** கதை எழுதுதல் :

மாதிரி

[குறிப்பு : அரசனொருவன் போரில் தோற்றல்—பகைவீரன் ஒருவன் அவனை அரசன் என்று அறியாமல், தன் பொருள்களைச் சுமந்துவரச் செய்தல்—பிரயாணம்—வழியில் வீரன் அளித்த அரிசியைச் சமைத்தல்—நாய் சோற்றுப்பானையைக் கவ்வி இழுத்தல்—அரசன் சிரித்துச் சும்மா இருத்தல்—வீரன் கோபித்துக் காரணம் கேட்டல்—அரசன் "சில மாதத்துக்குமுன் என் சமையற் பாத்திரங்களைச் சுமக்கப் பல ஒட்டகங்கள் வேண்டியிருந்தன. இன்று என் கலத்தைத் தூக்கும் வன்மை ஒரு நாய்க்கு இருக்கிறது" எனல்—உண்மையை அறிந்த வீரன் தன்னை மன்னிக்கும்படி வேண்டல்.]

தாழ்விலும் தளராமை

அரசன்ஒருவன் ஒருபோரில் தோற்றான். பகையரசனுடைய வீரர்களுள் ஒருவன், அவனைப் பிடித்து, அரசன் என்று அறியாமல், தன் பொருள்களை அவன்தலையின்மேல் வைத்து, சுமந்துவரச் சொன்னான். அவர்கள் பிரயாணத்தின் நடுவில் ஓரிடத்தில் தங்கினர். அரசன் சமைத்துச் சாப்பிடுவதற்காக வீரன் கொஞ்சம் அரிசி கொடுத்தான். அரசன் அவ்வரிசியை ஒரு பானையில் போட்டு, அதனை அடுப்பின் மேல் ஏற்றிவைத்து, சிறிது தூரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

அப்பொழுது நாயொன்று ஓடிவந்து அந்தப் பானையைக் கவ்வி இழுத்துக் கவிழ்த்தது. அரசன் அதைப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சும்மா இருந்தான். அதைக் கண்ட வீரன் சினங்கொண்டு, "ஓ மூடா,

நாய் உன் பானையைக் கௌவி இழுத்துப் போவதைப் பார்த்துச் சிரிக்கின்றாயே. உன் சிரிப்புக்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

அரசன் மௌனமாய் இருந்தான். வீரன் அவனைப் பின்னும் வற்புறுத்திக்கேட்டான். கேட்கவே, அரசன் "சில மாதங்களுக்குமுன் என் சமையற்பாத்திரங்களைச் சுமந்துசெல்லப் பல ஒட்டகங்கள் வேண்டியிருந்தன. இப்போது என் கலத்தைத் தூக்கிப்போகும் வன்மை ஒருநாய்க்கு இருக்கிறது. பல ஒட்டகங்கள் செய்த வேலையை ஒரு நாய் செய்ய நேர்ந்திருப்பதை நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது" என்றான்.

வீரன் அவனை அரசன் என்று அறிந்து, தன் குற்றத்தை எண்ணி வருந்தினான்; தான் செய்த தகாத செயலுக்காகத் தன்னை மன்னிக்கும்படி அரசனை வேண்டிக்கொண்டான்.

(a) கீழ்க்காணும் குறிப்புக்களைக் கொண்டு கதை எழுதுக.

1. பிரபுவுக்கு இரண்டுபிள்ளைகள்—இளையவனுக்குத் தீயோர்நட்பு—அவர்களின் கெட்ட போதனையைக் கேட்டுத் தன் பாகத்தைப் பிரித்துக் கொள்ளல்—வீண் செலவு—ஏழையாதல்—பிச்சையெடுத்தல்—தவிட்டையும் தின்னல்—உடல் மெலிதல்—தந்தை சொல்லைத்தட்டியதை எண்ணி இரங்குதல்—மன்னிப்புக் கேட்கத் தந்தையிடம் செல்லல்—பெற்றமனம் பித்து—தந்தை அம்மகனைத் தழுவி உணவும் உடையும் கொடுத்துக் காத்தல்—மகனுக்கு நல்லறிவு பிறத்தல்.

2. எறும்பு ஒன்று ஆற்றில் விழுதல்—தப்ப முயன்றும் முடியாமல் தவித்தல்—ஆற்றங்கரையில் உள்ள மரத்தின் கிளையில் இருந்த புரு வருந்தும் எறும்பைக் காணல்—இலையொன்றை எறும்புக்கு அருகில் இடல்—எறும்பு இலைமீதேறிக் கரை சேர்தல்—வேடன் அப் புருவைக் கொல்ல அம்பினல் குறிபார்த்தல்—எறும்பு அவனது பாதத்தில் கடித்தல்—குறி தப்பல்—புரு உயிர் பிழைத்தல்.

3. ஒரு மரத்தின்மேல் இரண்டு காகங்களும், அதனடியில் ஒரு பொந்தில் ஒரு பாம்பும் வசித்தல்—பாம்பு காக்கையின் முட்டைகளை நாள்தோறும் உண்ணல்—அப் பாம்பை அழிக்குந் தந்திரம்—அரசி நீராடும்போது அவளது பொற்சங்கிலியைக் காகம் எடுத்துவந்து அம் மரப்பொந்தில் இடல்—அரசனுடைய வேலையாட்கள் பாம்பைக் கொன்று சங்கிலியை எடுத்துச் செல்லுதல்—காகங்களின் மகிழ்ச்சி.

4. மன்னவன் ஸாலமனின் சபையில் பெண்கள் இருவர் வருதல்—ஒருத்திகையில் இறந்த குழந்தை—மற்றெருத்திகையில் உயிர்க்குழந்தை—வழக்கிடுதல்—நீதிபதி அதை வெட்டி ஆளுக்கு ஒரு பாதியாய் அளிக்கும்படி ஆணையிடல்—ஒருத்தி "வெட்டவேண்டாம். அவளிடமே அளியுங்கள்" எனல்—மற்றெருத்தி, "வெட்டிப் பங்கிடுங்கள்" எனல்—அக் குழந்தையைப் பெற்ற தாயை அரசன் அறிதல்—தீர்ப்பு.

(b) பின் உள்ள படங்களைப் பார்த்துக் கதை எழுதுக.

# சிங்கமும் சுண்டெலியும்








S. BRAHMA

(c) கீழ்க்குறித்துள்ள கதைகளை எழுதுக.

1. நாயும் நிழலும். 2. நரியும் செம்மறியாடும். 3. ஆமையும் இரண்டு அன்னங்களும். 4. தவளைகள் தமக்கு அரசனை அளிக்கக் கடவுளை வேண்டல். 5. கழுதையும் உப்புமூட்டையும். 6. இரண்டு பிரயாணிகளும் கரடியும். 7. சிங்கமும் முயலும். 8. ராபர்ட் ப்ரூஸூம் சிலந்தியும்.

(d) ஆசிரியர் முதலியோர் கூறுங் கதைகளைக் கேட்கும்போதும் கதைப்புத்தகங்களைப் படிக்கும் போதும் குறிப்பு எழுதிவைத்துக்கொண்டு, பின்பு அக் கதைகளைச் சொல்லப் பழகுக.

B. வரலாற்றுக் கட்டுரையும் வர்ணனைக் கட்டுரையும்
(Narrative and Descriptive essays)

(a) கீழ்க்காணுங் குறிப்புக்களைக்கொண்டு கட்டுரை வரைக.

1. நவராத்திரி: ஹிந்துக்கள் பண்டிகை—புரட்டாசி அமாவாசைக்கு மறுநாள்முதல் 9 நாள்—லக்ஷ்மி, சரசுவதி, காளி மூவருக்கும் முறையே மும்மூன்று நாள் பூஜை—மஹிஷாசுரனுக்கும் காளிக்கும் 9-நாள் போர்—வீடு, கோயில்களில் அலங்காரமும் விழாவும்—கொலுவைத்தல்—ஸரஸ்வதி பூஜை—மைசூர் தசரா—விஜயதசமி: பள்ளிக்கு வைப்பது.

2. ரவிந்திரநாத் தாகூர்: மஹாகவி—இளமையில் கவிபாடும் சக்தி—குடும்பத்தினர் கலைகளில் வல்லவர்—பிறப்பு, கல்கத்தா 1861 மே 6—இளமையில் தந்தையுடன் இமயமலைக்குச் சென்று இயற்கையைக் கண்டு மகிழ்தல்—பள்ளிப்படிப்பை வெறுத்தல்—உலகமே பள்ளி, இயற்கையே பாடப்புத்தகம்—இருபதாம் வயதில் கவிபாடுதல்—கீதாஞ்சலியும் உலகப் புகழும்—கதைகளும் நாடகங்களும்—நோபல் பரிசு—

பலமுறை உலகச் சுற்றுப் பிரயாணம்—எங்கும் குதூகல வரவேற்பு—போல்பூரில் 'சாந்தி நிகேதன' கலாசாலை—தேசாபிமானி—1941 ஆகஸ்ட் 7-இல் மறைவு.

3. கிளி : அழகான பறவை—பலவகை—உறுப்புக்கள் : அலகு ஏன் உறுதியாய் வளைந்திருக்கிறது? கொட்டைகளை உடைக்க—கால்விரல்கள் முன் இரண்டு பின் இரண்டு: அவ்வாறு அமைந்தது என்? கற்பித்த அளவில் பேசும்—இன்ப மளிக்கும்—கூட்டில் அடைத்தல் பாவம்—'சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை'.

4. சந்திரன் : பூமிக்கு அருகில் இருப்பது; 2,40,000 மைல் தூரம். ஐம்பது சந்திரன் பூமிக்குச் சமம்—சூரியனைவிட மிகச்சிறியது—மலையும் சமவெளிகளும் உள; ஒளி குறைந்துள்ள இடங்கள் பெருவெளிகள்—இயல்பாக வெளிச்சம் இல்லை; சூரியனிடமிருந்து பெறுதல்—அமாவாசை, பௌர்ணமி-பிறை தொழுதல்; வளர்பிறை, தேய்பிறை; சந்திரனுக்கு உண்மையில் வளர்வு தேய்வு இல்லை—சந்திரன் உதிக்கும்போது ஆம்பல் விரிதல்; தாமரை குவிதல்—களங்கம்; மான், முயல்—27 நட்சத்திரங்கள், மனைவியர்—பௌர்ணமி நிலா : இன்பம். பயிரை வளர்க்கும், கடல் பொங்குதல்: சிறுவர் விளையாடுதல்.

(d) கட்டுரை எழுதுக. [இரண்டு பக்கம்]

1. கார்த்திகைத் திருநாள். 2. ஜவாஹர்லால் நெஹ்ரு. 3. உன் மனத்தைக் கவர்ந்த பேசும் படக்காட்சி. 4. பொருட்காட்சிச்சாலை. 5. தென்னை. 6. சிங்கம். 7. பத்திரிகை. 8. இரும்பு. 9. காகிதம். 10. தமிழ்மொழி.

பின்வரும் படங்களைப் பார்த்து அந்தத் தொழில் செய்யும் முறையைப்பற்றிக் கட்டுரை வரைக.

# தச்சு வேலை



# மூங்கில் வேலை



விளக்கக் கட்டுரை (Expository Essays):

ஒரு பழமொழியைக் கொண்டு அதை விளக்கி எழுதுவதுபோன்ற கட்டுரை விளக்கக்கட்டுரையாகும்.

கருத்துக்களை நன்கு விளக்குதற்குப் பழமொழிகள் பயன்படும். ஒன்றைப்பற்றிப் பேசும்பொழுதும் எழுதும்போதும் பொருத்தமான பழமொழிகளை எடுத்தாளுவோமாயின், அவற்றைக் கேட்போர் படிப்போர்மனத்தில் கருத்து நன்கு பதியும். உதாரணமாக, சிறியோர் ஐயமறப் படித்தாலும், கேட்டாலும், பிறர்க்குதவி செய்தாலும் தாம் அடங்கிநடந்து, நற்கதி அடையமாட்டார். "கங்கையில் படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகுமோ?"; தீயோர்க்கு ஆயிரந்தடவை சொன்னாலும் மறந்துவிட்டுத் தீங்கே செய்வர். நல்லோர்க்கு ஒரு வார்த்தை சொல்லுமளவில் அவர் மனம்வருந்தி நல்வழியில் திரும்புவர். "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டிர்க்கு ஒரு வார்த்தை"; தீயோர் வந்தபொழுது அவர்களைப் போக்கக் கையில் கருவி இல்லை. "நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" என்பனவற்றைக் காண்க.

மாதிரி:

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

குறிப்பு: பழமொழி விளக்கம்—தினசரி வாழ்க்கையில் அதன் பயன்—அதனைப் பின்பற்றாவிடின் வருங் கேடு—முடிவுரை—உதாரணம்.

நம் தமிழ்நாட்டில் உணவுக்கு இன்றியமையாதது நெல். வயலில் நெல்லை அறுவடை செய்தவுடன், நெல்லரிகளைக் கட்டிக் களத்துக்குச் சுமந்துசெல்வர்; அங்கு அரிகளை அடித்து நெல் வேறு, வைக்கோல் வேருகப் பிரிப்பர். அந் நெல்லைத் தூற்றி, நெல்மணி வேறு, பதர் வேருகப் பிரித்தற்குக் காற்று வேண்டும். காற்று அடிக்கும்போது தூற்ருமல் சோம்பியிருப்பின், பின்னர் அதற்காகக் காத்திருக்க வேண்டும்; காலதாமதமும் பொருட்சேதமும் நேரும். அதை விளக்கவே "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழி பிறந்தது. ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து முடித்தற்கு ஏற்ற வசதி வாய்க்கும்பொழுது, அதைக் கைநழுவ விடலாகாது என்பதே இதன் உட்கருத்து.

இதனை எல்லாரும் தத்தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும். வாழ்க்கையை நடத்துவது எளிதன்று அதில் எத்தனையோ இடையூறுகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன. நல்ல சந்தர்ப்பங்கள் வாய்ப்பது அரிது. அவற்றை நழுவவிடின், பின் அவை வாரா. இன்று செய்ய வேண்டுவதை இன்றே செய்க; நாளை, நாளை என்று தள்ளிப்போடலாகாது. மக்களின் உடல் நிலையில்லாதது. இன்று உடல்நலம் பெற்றுள்ள ஒருவன் நாளை நோய்வாய்ப்பட்டு வருந்துதல் உலகியற்கை. அதனல், அரைகுறையாய் விடப்பட்ட வேலை முடிவடையாது. அதே வேலையைப் பிறன்ஒருவன் செய்து பேரும் புகழும் பொருளும் பெற்று இன்புறுவான். பின்னர், நாம் ஏமாற்றமடைந்து ஏங்கியிருக்க

நேரும். மாணக்கன் ஒருவன் வகுப்பில் ஆசிரியர் கற்பிக்குங்காலத்தில் பராக்குப் பார்த்துக்கொண்டும், கற்பித்த பாடங்களை நீண்ட விடுமுறைக்காலங்களில் படிக்காமல் வீண்பொழுது போக்கிக்கொண்டும் இருப்பின், அவன் பரீட்சையில் தேர்ச்சிபெறுவது எவ்வாறு? அவ் விடுமுறை பரீட்சைக்குமுன் மீண்டும் வருமா?

ஒருவன் செய்யவேண்டுங் கருமங்களைக் கவனக் குறைவாலோ சோம்பலாலோ அவ்வக்காலத்தில் செய்யத் தவறின், அவன் பல துன்பங்களுக்கு ஆளாவதோடு ஆயுள் முழுவதும் வருந்தவும் நேரிடும். இழந்த சந்தர்ப்பங்களை மீண்டும் பெறினும், நன்மை பயக்கும் முறையில் செய்துகொள்ள முடியாதவாறு பல இடையூறுகள் குறுக்கேநிற்கும். காலத்தை நழுவவிட்டவன் தன் மடமையைக் குறித்துப் பின்னர் இரங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்! அந்த ஒரு தவறு காரணமாக வாழ்நாள் முழுவதும் வருந்த நேரிடினும் நேரும்.

மாரிக்காலத்துக்கு வேண்டுவதைக் கோடைக்காலத்திலும், முதுமைக்கு வேண்டுவதை இளமையிலும், இரவிற்கு வேண்டுவதைப் பகலிலும் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும். ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடும்போது அணையின்மூலம் ஏரியிலும், குளத்திலும் நீரைப் பாய்ச்சி நிறைத்து வைத்திருக்கவேண்டும். இல்லையேல், வியவசாயம் செய்யமுடியாது: குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் இல்லாமல் தவிக்க நேரும்.

ஒருபிரபு தன்குதிரையின் காலில் லாடத்தில் ஆணி கழன்றிருப்பதைப் பொருட்படுத்தாமல் பிரயாணம் செய்தார். ஒருகாட்டின்வழியே போகும்போது லாடம் கழலவே, குதிரை நடக்கமுடியாமல் நின்றுவிட்டது. இருட்டியவுடன், திருடர்கள் அவன்பொருள்களைக் கவர்ந்து சென்றனர். அவன் தன் அறியாமையை எண்ணி இரங்கி வருந்தினன். பயன் என்ன?

ஆதலால், ஒன்றனை முடிக்க வாய்ப்பு ஏற்படும்போது அதை நழுவவிடுவது அறியாமையாகும். சோம்பலை யொழித்து, கவனத்தோடு காற்றுள்ள போது தூற்றிக்கொள்பவனே அறிவாளியாவான்.

### பயிற்சி

கீழ்க்காணும் பழமொழிகளைப்பற்றிக் கட்டுரை எழுதுக.

1. அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பர்.
2. கொல்லத்தெருவில் ஊசி விற்றல்.
3. நுணல் (தவளை) தன் வாயால் கெடும்.
4. தாய் மிதிக்கக் குஞ்சு முடமாமோ?
5. பழி யோரிடம் பாவ மோரிடம்.
6. பாம்பறியும் பாம்பின் கால்.
7. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?

## II. கடிதம் எழுதுதல் (Letter-Writing)

**கடிதம் எழுதும் முறை**

நாம் ஒவ்வொருவரும் பல சமயங்களில் பலவகையான கடிதங்கள் எழுத நேரும். உறவினருக்கும் நண்பருக்கும் க்ஷேமத்தைக் குறித்தும் பல செய்தியைக் குறித்தும் கடிதம் எழுதுகின்றோம்; திருமணம், விருந்து முதலியவற்றிற்கு அழைப்புக்கடிதம் விடுகின்றோம். நீங்கள் விடுமுறை யளிக்க வேண்டி ஆசிரியருக்குக் கடிதம் எழுதியிருப்பீர்களே! பெரியவர்கள் வியாபாரம், உத்தியோகம் முதலியவற்றிற்காகவும் எழுதுவார்கள். ஆதலின், ஒவ்வொன்றையும் எழுதும் முறையை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

எவ்வகைக் கடிதங்களிலும் கைக்கொள்ள வேண்டிய பொதுமுறைகள் சில உள. அவை வருமாறு :

1. தலைப்பு.
2. வாழ்த்து அல்லது வணக்கம்.
3. எழுதுஞ் செய்தி.
4. முடிவில் வழங்கும் முறை.
5. கையொப்பம்.
6. முகவரி.

இவற்றைக் குறித்துத் தனித்தனியே சிறிது கவனிப்போம்.

1. தலைப்பு :—இதில், எழுதுபவரின் விலாசம், எழுதும் தேதி இவற்றைக் குறிக்கவேண்டும். காகிதத்தின் வலப்பக்கத்தின் மேலிடத்தில் எழுதுபவரின் விலாசமும், அதன்கீழ்த் தேதியும் குறிக்க வேண்டும்.

உதாரணம் :

10, மாதவப்பெருமாள் கோவில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.
18—5—1948.

குறிப்பு :

1948 மே 18 என்றும் எழுதலாம்.

2. வாழ்த்து அல்லது வணக்கம் :—நாம் யாருக்கு எழுதுகிறேமோ அவர்கட்குத் தக்கவாறு இதனை அமைக்கவேண்டும்.

சமாசாரக்கடிதத்தில் :—பெரியவர்கட்கும் சிறியவர்கட்கும் ஏற்றமுறையில் எழுதவேண்டும்.

(i) உறவினருள் பெரியவர்கட்கு—அன்பார்ந்த........ அவர்கட்கு வணக்கம்.

சிறியவர்கட்கு — அன்பார்ந்த.................நலன் உண்டாகுக.

(ii) நண்பருள் பெரியவர்கட்கு—அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

சிறியவர்கட்கு—(பெயரை எழுதலாம்) அன்பார்ந்த நாராயணனுக்கு நலன் உண்டாகுக.

3. எழுதுஞ் செய்தி :—இதுவே கடிதத்தின் முக்கிய வுறுப்பு. வாழ்த்துக்கு அடுத்த வரியில், அது தொடங்கும் இடத்துக்குச் சிறிது வலப்புறத்தில் எழுதுஞ் செய்தியைத் தொடங்க வேண்டும்.

எழுத விரும்புஞ் செய்திகளைப்பற்றிச் சிறிது நேரம் எண்ணுக. அவசியமாயின், வேறு ஒரு துண்டுத்தாளில் அக் கருத்துக்களைக் குறித்துக்-

கொள்க. அவற்றை முறைப்படுத்தி, ஒவ்வொன்றையும்பற்றி எழுதவேண்டுவனவற்றையெல்லாம் பத்தி ('பாரா') பிரித்து எழுதுக.

கடிதத்தின் நடை அதன் வகையைப் பொறுத்தது. நண்பருக்கோ, உறவினருக்கோ கடிதம் எழுதினுல், அவரோடு நேரே பேசுவதுபோல எண்ணிக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நீ எழுதுவது இயற்கையாய், எளிதாய், விளக்கமாய் இருக்கும். ஆனுல், பேசுவதுபோலக் கொச்சை மொழிகளை எழுதுதல் முறையன்று. கட்டுரையில் எழுதுவதுபோலக் கடினசொற்களைக் கையாள்வோமாயின், கடிதத்தின் அழகு கெட்டுப்போம். எளிய நடையில் இஷ்டம்போல் எழுதினும், தெளிவாக நிறுத்துக்குறிகளை அமைத்து, எழுத்துப் பிழையும் சொற்பிழையும் இலக்கணப்பிழையும் இன்றி, படிப்போர்க்குக் கருத்து நன்கு விளங்குமாறு, சிறுசிறு வாக்கியங்களை அமைத்துக்கடிதத்தை எழுதவேண்டும்; தமிழ்மரபும் கெடலாகாது. இவற்றில் தவறு இருப்பின், "எழுதியவன் கல்வியறி வில்லாதவன்" என்று கடிதத்தை வாசிப்போர் கருதக்கூடும். "தவலை போய்விட்டது" என்பதற்குப் பதிலாக, "தலை போய்விட்டது" என்று எழுதினுல், படிப்போர்க்கு எவ்வளவு துன்பம் உண்டாகும், பாருங்கள். ஆதலின், எழுதிய செய்தியைச் சோம்பலின்றி, ஒருமுறைக் கிருமுறை திருப்பிப் படித்துப் பார்க்கவேண்டும். ஒருவன் எழுதுங் கடிதத்திலிருந்து அவனுடைய அறிவு, குணம், ஒழுக்கம் இவைகளை எளிதல் அறிய இயலும்.

**4.** முடிவில் வழங்கும் முறை:—ஒரு கடிதத்தை முடிக்கும்பொழுது, செய்திக்குப் பின் கையொப்பமிட்டு முடித்துவிடின், அது மரியாதைமுறை ஆகாது. அதனல், முடிக்கும் முறைகள் சிலவற்றை அறிஞர் வகுத்துள்ளனர். அவை செய்திப்பகுதியின் கடைச்சொற்குக் கீழ் அமையவேண்டும்.

(i) உறவினருள் பெரியவர்க்கு :–தங்கள் அன்பார்ந்த மைந்தன், மருமகன், தம்பி, மகன் முதலியன.

(ii) உறவினருள் சிறியவர்க்கு :—உன் அன்பார்ந்த தந்தை, அம்மான், தமையன் முதலியன.

(iii) நண்பருள் பெரியவர்க்கு :—வணக்கமுள்ள அன்பன்.

நண்பருள் சிறியவர்க்கு :—உன் அன்பு மிக்க நண்பன்.

(iv) ஆசிரியருக்கு :—தங்கள் வணக்கமுள்ள மாணக்கன்.

**5.** கையொப்பம் :—எழுதுபவர், முன் கூறிய பகுதிக்குக் கீழே சிறிது வலப்பக்கமாகத் தள்ளி, தம் பெயரை எழுதவேண்டும்.

**6.** முகவரி (விலாசம்) :—முதல்வரியில் எழுதப்படுவோரின் பெயரும் பட்டமும், அடுத்த வரியில் தொழிலும், மூன்ரும் வரியில் அவர் இருக்கும் வீட்டின் எண்ணும் தெருவின் பெயரும், அதற்கடுத்த வரியில் ஊர்ப்பெயரும், பின் ஜில்லாவின் பெயரும் எழுதவேண்டும்.

### கடிதம் எழுதுதல்

கீழ் வகுப்பில் சில கடிதம் எழுதும் முறைகளைச் சிறிது அறிந்திருக்கிறீர்கள். இன்னுஞ் சிலவற்றை இங்கு அறிந்துகொள்வோம்.

**மாதிரிக் கடிதம் 1.**

உன் கலாசாலைச் சங்கஆண்டுவிழாவில் தலைமை தாங்குமாறு வேண்டிப் பெரியார் ஒருவருக்கு அழைப்பு விடுத்தல்.

இந்து தியலாஜிகல் உயர்தர கலாசாலை,
சென்னை,
5—3—1949.

அன்பார்ந்த ஐயா,

வணக்கம். எங்கள் கலாசாலைத் தமிழ்ச்சங்க-ஆண்டுவிழாவை இவ்வாண்டு மார்ச்சுமீ பத்தாந் தேதியில் கொண்டாடவேண்டும் என்று எங்கள் தலைமையாசிரியர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்நாட் கூட்டத்துக்குத் தாங்கள் வந்து தலைமை தாங்கவேண்டும் என்று வேண்டுகின்றேன். கலா-சாலை மாணக்கர், ஆசிரியர் அனைவரும் தங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். ஆகலின், தாங்கள் அன்புகூர்ந்து எழுந்தருளி எங்களுக்கு ஆசிகூற வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
சதாசிவம்,
சங்க அமைச்சன்.

முகவரி

திரு. S. இராமசாமி நாயடு அவர்கள்,
மேயர்,
சென்னை.

2. நண்பன் குறித்த நாளில் அவனைப் பார்க்காததைக் குறித்து மன்னிக்கவேண்டிக் கடிதம் எழுது.

18, பச்சையப்ப முதலித் தெரு,
மாயூரம்,
10-8-1948.

அன்புள்ள கணேசா,

நேற்று மாலை ஐந்து மணிக்குக் கடற்கரையில் உன்னைச் சந்திப்பதாகக் கூறியிருந்தேன். நான் சொன்னபடி செய்யாமைக்கு என்னை மன்னிக்க வேண்டுகின்றேன். காரணத்தை அறிந்தால் என்னைக் கோபித்துக்கொள்ளமாட்டாய் என்று எண்ணுகின்றேன்.

நேற்று மாலை உன்னைக் காணப் புறப்பட்ட பொழுது, என் தாயாருக்கு உடல்நலமில்லை என்றும், நான் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்றும் தந்தையாரிடமிருந்து தந்தி வந்தது. ரயிலுக்குப் போக அதிக நேரம் இல்லை. உனக்குச் சொல்லி அனுப்ப வீட்டில் ஒருவரும் இல்லை. ஆதலால் உடனே புறப்பட்டு இங்கு வந்துவிட்டேன்.

என் தாயாருக்கு உடல் சிறிது குணமாயிருக்கிறது. படுக்கைதான். முழுதும் குணமடைய இரண்டு மாதம் ஆகும் என்று டாக்டர் சொல்லுகிறார். எல்லாம் ஈசன் செயல்.

என் வரவை எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்திருப்பாய். அதற்கு என்னை மன்னிக்கவேண்டும்.

அன்பன்,
கார்த்திகேயன்.

முகவரி

திரு. கணேசன்,
2-ஆவது பாரம்,
ஹிந்து ஹைஸ்கூல்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

3. துண்டு விளம்பரம் :

அன்பார்ந்த ஐயா,

இம் மாதம் பதினைந்தாம் தேதி (15-5-49) புதன் கிழமை மாலை ஐந்து மணிக்குச் சிதம்பரம் கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியில் அடியார்பெருமை என்னும் பொருள்பற்றி வித்வான், ஜ. சடகோபராமாநுஜ நாயடு அவர்கள் பிரசங்கம் செய்வார்கள். அனைவரும் வருக.

இங்ஙனம்,
சுந்தர ராமாநுஜன்.

12—5—49

பயிற்சி

1. பள்ளிக்கூடப் புதுக்கட்டடத்தைத் திறந்து வைக்குமாறு வேண்டிக் கல்வி மந்திரிக்குக் கடிதம் எழுதுக.

2. உன் அண்ணனின் திருமணத்துக்கு வருமாறு அழைப்புக்கடிதம் விடுக்க மறந்ததற்கு மன்னிக்கும்படி நண்பனுக்குக் கடிதம் எழுது.

3. வீதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்தற்கு, அங்கத்தினரை அனுப்பி உதவுமாறு சுகாதாரச் சங்கத்தின் தலைவருக்குக் கடிதம் எழுது.

4. பெரும்புலவர் ஒருவரைப் பாராட்டி விருந்தளித்தற்குத் தம் தோட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி தருமாறு ஒரு பிரபுவை வேண்டிக் கடிதம் எழுது.

5. சுதந்திர விழாவைக் கொண்டாடுவதற்குத் தம் கூடத்தை (Hall) உதவும்படி ஒரு செல்வருக்குக் கடிதம் எழுது.

6. குறித்த தேதியில் கூட்டம் நடத்த இயலவில்லை என்று தலைவருக்கும் பிரசங்கம் செய்ய ஒப்புக்கொண்டவருக்கும் கடிதம் எழுது.

## III. உரையாடல்

இளைஞர்களே, நீங்கள் ஒருபொருளைப்பற்றி ஒட்டியும் வெட்டியும் பேசப் பழகுதல் வேண்டும். அப்பொழுதுதான் ஆராய்ச்சியறிவும், ஆழ்ந்து ஆலோசிக்கும் திறமும், பொறுமையும், எதிராளியின் கருத்தை அறிந்து ஏற்றுக்கொள்ளுங் குணமும் உண்டாகும்.

மாதிரி

### நகரவாழ்க்கையும் நாட்டுவாழ்க்கையும்

நம்பி—நாகா, வணக்கம். உன்னை இந்நகரத்தில் பார்த்துப் பலநாள் ஆச்சே.

நாகன்—வணக்கம், நம்பி. நான் இங்கு ஒரு காரியமாக இன்று காலை வந்தேன்; வேலை முடிந்த

வுடன் இன்று மாலையே என் கிராமத்துக்குத் திரும்பி விடுவேன்.

நம்—இங்குத் தங்கியிருக்கலாகாதோ ?

நா—நகரவாழ்க்கையை நான் விரும்புவதில்லை. எங்கும் ஒரே புகைபடிந்த காற்றும், கூச்சலும் குழப்பமுந்தான் காணப்படும். எனக்குப் பரிசுத்தமான காற்றும் அமைதியும் வேண்டும்.

நம்—இங்கு நல்ல காற்று இல்லை. இது சரிதான். ஆனல், கூச்சலைப்பற்றிக் கூறினயே. சிலநாள் இங்கிருந்தால், அது பழகிப்போய்விடும். பட்டிக்காட்டில் என்னல் இருக்கவே முடியவில்லை. அங்கு வந்தால், எனக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் இருக்கும். நகரத்தில் உள்ள காட்சிகளும் ஜனக்கூட்டமும் நாட்டுப்புறத்தில் இருக்குமா ?

நா—நம்பி, நீ சொல்வது ஆச்சரியமாய் இருக்கிறதே ! நகரத்தில் எங்குப் பார்த்தாலும் அசுத்தம் ! குப்பையுள்ள தெருக்கள் ! ஆலைகளின் புகைக்கூண்டிலிருந்து மேகம் போன்ற புகை ! பார்க்கத்தகாத விளம்பரப்படங்கள் ! என் கிராமத்தில் பச்சைப்பசேல் என்னும் நெல்வயல்களும், புல்வெளிகளும், நிழல் மிக்க சோலைகளும், பூந்தோட்டங்களும், ஆற்றங்கரையும், மலைச்சாரலும் கண்ணைக் கவருமே! இயற்கையழகே அழகு !

நம்—வயலையும் மலையையும் ஒரு தரம் பார்த்தால் போதாதா ! தினம் பார்ப்பதற்கு அதில் என்ன இருக்கிறது ?

நா—ஐயோ, பாவம் ! உனக்கு அவைகளின் அருமை தெரியவில்லை ! இயற்கைக் காட்சியில்

எத்தனையோ புதுமைகளைக் காணலாம்! காணக் கண்மட்டும் வேண்டும்.

நம்—நாட்டுவாழ்ககை உயிரற்ற வாழ்க்கை. நாடகம், 'சினிமா', பிரசங்கம், 'ரேடியோ', பாட்டுக்கச்சேரி—ஏதாவது அங்கு உண்டா?

நா—மற்றவை இல்லாவிடினும் ரேடியோ இருக்கின்றது. அதன்மூலம் நீ சொன்ன எல்லாவற்றையும் கேட்டு மகிழ்கின்றேன். இனி, அரசாங்கத்தார் நம் நாட்டில் பெரும்பாலும் ஒவ்வோர் ஊரிலும் ரேடியோ அமைத்துவிடுவர். கிராமத்தில் இருந்துகொண்டே நீ சொல்லும் நகர நன்மைகளை அடையலாம். ஆனால், கிராமத்தில் உள்ள இன்பம் நகரத்தார்க்குக் கிட்டுமா? ஒழிந்தவேளையில் நான் தோட்டத்தில் வேலை செய்வேன்; வேட்டையாடுவேன்; குன்றின்மேல் ஏறி இயற்கையழகைக் கண்டு மகிழ்வேன்; ஆற்றில் குளித்து நீந்துவேன்; இரவில் நல்ல இலக்கியங்களைப் படிப்பேன்; என் வாழ்நாள் இன்பமாய், அமைதியாய்க் கழிகின்றது.

நம்—நாகா, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை பிடிக்கும். எனக்கு உன் வாழ்க்கை உற்சாகமில்லாததாகத் தோன்றுகிறது.

நா—உற்சாகம் உண்டோ, இல்லையோ. நான் நோய்நொடி இல்லாமல் சௌக்கியமாய் இருக்கிறேன். நகரத்தில் விரைவில் பரவுங் கொள்ளைநோயும். ஆயிரக்கணக்கான வியாதிகளும் அங்கு இல்லை. எங்கள் எளிய வாழ்க்கை எங்களுக்கு நீண்ட வாழ்நாளைத் தருகின்றது.

நம்—அது உண்மை. நகரமக்களைவிட நாட்டுமக்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர். ஆனால்,

வேண்டும் பொருள்கள் விரைவில் இங்குக் கிடைப்பதுபோல, அங்குக் கிடைக்குமா?

நா—நான் இருக்கும் ஊர் நகரத்துக்கு அருகில் உளது. போக்குவரவுக்கு ரயில், மோட்டார் முதலியவை இருக்கின்றன. எந்தப் பொருளும் எளிதில் கிடைக்கும். எனக்குச் சொந்த வீடு இருக்கின்றது. அதனால், வீட்டுவாடகை இல்லை. காய்கறி. பால், தயிர் இவை மிக மலிவாய்க் கிடைக்கும்; நல்ல நீர்வசதி உண்டு. வீண் செலவுக்கு இடமே இல்லை. கிராம வாழ்க்கை ஆரவாரம் இல்லாத எளிய வாழ்க்கை; அமைதியும் இன்பத்தையும் தரும் வாழ்க்கை. இப்போது அரசாங்கத்தார் நம் தேசத்தில் கிராமங்கள் விரைவில் முன்னேற்றம் அடைதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்; நகரங்களில் ஜனத்தொகையைக் குறைக்க வழி துறைகளை ஆராய்கின்றார்கள். இருக்கட்டும், நீ என் ஊருக்கு ஒருமுறை வா. பின்பு உன் கருத்தை எனக்குச் சொல்லு.

நம்—நாகா, நான் நிச்சயமாய் அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை வருகிறேன். வணக்கம்.

பயிற்சி

(a) கீழ்க்காணும் குறிப்புக்களைக் கொண்டு உரையாடற் கட்டுரை எழுதுக.

(1) போர்வீரனும் வர்த்தகனும் தத்தம் தொழிலின் மேன்மையைக் கூறல்.

போர்வீரன்: உயர்ந்த தொழில் — அஞ்சாமை — நாட்டைக் காத்தல்—உன் தொழில் இழிவுள்ளது— ஆண்மையுடையதன்று.

வர்த்தகன் : நீ ஆக்குவது ஒன்றுமில்லை—அழிக்கிறாய்—கசாப்புக்கடைக்காரனின் வேலைபோன்றது — இரக்கமில்லை — ஏழையாய் இருப்பாய் — என் தொழிலோ சமூகத்துக்கு நன்மை—தொண்டு—செல்வம் வளரும்—உயர்ந்த தொழில்.

(2) வேடனும் உழவனும்

வேடன் :—வேட்டையாடுதல் வீரன்தொழில்—தைரியம் — உற்சாகம் — கொடிய விலங்குகளைக் கொன்று பயிரையும் உயிரையும் காத்தல்—உன் தொழில் அற்பம்.

உழவன் :—உன் தொழில் கொடியது—ஏழையுயிரைக் கொல்லுதல்—அழித்தலேயன்றி ஆக்குவது ஒன்று மில்லை—நான் தானியத்தை விளைத்து, உணவை அளித்து உயிரைக் காக்கிறேன்—உலகினை அழகுடையதாகச் செய்தல்.

(3) உடற்பயிற்சி செய்யாமல் எப்பொழுதும் படித்துக்கொண்டே இருக்கும் பீடரும், படிக்காமல் எப்பொழுதும் விளையாடிக்கொண்டே இருக்கும் பால் என்னும் மாணாக்கனும் உரையாடல்.

பால் : புத்தகத்தை மூடு — விளையாடு — என்ன பரீக்ஷை ? என்ன பட்டம் ? குமாஸ்தாவேலை —வேலையில்லாத் திண்டாட்டம்—எனக்குக் கவலையில்லை—அறிவும் ஊக்கமும் போதும்—படிக்காமலே அறிவைப் பெறலாம்—உடல்வலிமை யில்லாதவன் படிப்பினால் பெறும் பயன், வெளுத்த முகமும் மெலிந்த உடம்பும் மார்புக்கூடும் மூக்குக்கண்ணாடியுமே—விரிந்தமார்பும், ஒளிபெற்ற முகமும், வலிமைபெற்ற கைகால்களும் வேண்டாமா ?—விளையாடு.

பீடர் :—பரீட்சை நெருங்கிவருதல்-பட்டம் பெறுதலும் அறிவை வளர்ப்பதும்—உடல்வளர்ச்சியைவிட அறிவுவளர்ச்சியே மேலானது. (ஆசிரியர் தீர்ப்பு : இரண்டும் இன்றியமையாதவை.)

(b) பின் வருபவற்றைச் சம்பாஷணை முறையில் எழுதுக.

1. பிச்சை இடலாமா, இடக்கூடாதா?
2. நம் நாட்டுக்கு வேண்டுவது சிறு குடிசைத் தொழிலா, இயந்திரக் கைத்தொழிலா?
3. அதிகத் தீமை விளைப்பது தீயா, வெள்ளமா?
4. பரீட்சை வேண்டுமா, வேண்டாமா?

(c) 1. திருச்சியிலிருந்து திருநெல்வேலிக்குப் போக ரெயிலில் பிரயாணம் செய்கிறாய். டிக்கட் பரிசோதகர் வருகிறார். உன் டிக்கட்டைக் காணவில்லை. அப்பொழுது உனக்கும் அவருக்கும் இடையே நிகழுஞ் சம்பாஷணையை எழுதுக.

2. நீ ஒரு புதுக்குடை வாங்கிவந்தாய். வீட்டுக்கு வந்து பார்த்தபோது ஒருகம்பி ஒடிந்திருந்தது. திரும்பிக் கடைக்கு எடுத்துச் சென்றாய். உனக்கும் கடைக்காரனுக்கும் நிகழும் பேச்சை முறைப்படி எழுதுக.

3. பேசும் படக்காட்சியைக் காண விரும்பும் ஒருசிறுவனும் அவன் தந்தையும் பேசிக்கொள்வதை எழுதுக.

4. சென்னைக்குச் சென்று திரும்பிய ஒருவனுக்கும் அவன் தங்கைக்கும் இடையே நிகழும் பேச்சை எழுதுக.

## IV. நாட்குறிப்பு

கீழ் வகுப்பில் நாட்குறிப்பு எழுதும் முறையை அறிந்து கொண்டீர்கள். அம்முறைப்படி இவ்வகுப்பிலும் முக்கியமான செய்திகளை அந்த அந்தத் தேதிகளில் தவறாமல் எழுதும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள்.